பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 20 வெள்ளிக்கிழமை (04-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:40

# பேச்சுத் தொடங்க முன் யுத்தநிறுத்த ஒப்பந்தம்!

## புரிந்துணர்வின் அடிப்படையில் அரசு – புலிகள் செய்துகொள்வர்

கொழும்பு,ஜனவரி4

**இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரு தரப்புப் போர்நிறுத்தத்தை ஒருங்கிணைக்கும் வகையில் புரிந்து ணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வர்.**

**இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாவதற்கான அனுசரணையை நோர்வே வழங்கும்.**

பேச்சுக்கு முன்னர் புரிந்துணர்வு அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதில் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பும் அதிக ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுத் தரப்பு கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் மூலமாக இதுவிடயத்தில் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப் பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தையும் -

அரசு தரப்பு அறிவித்துள்ள மோதல தவிர்ப்பு நடவடிக்கையையும் -

பொதுவான - முறையான - வகையில் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடனேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படவிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது என்பதை அமைச்சர் ஜி.

(2ஆம் பக்கம் பார்க்க)

### பாலசிங்கம் - நோர்வேத் தரப்பு

## லண்டனில் இன்று நடைபெறுகின்ற பேச்சை வரவேற்கின்றது பிரிட்டன்!

லண்டன்,ஜன.4

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் அனுசரணையாளர் குழு இன்று லண்டனில் நடத்தவிருக்கும் பேச்சை பிரிட்டன் வரவேற்கின்றது.

பிரிட்டனில் புலிகள் இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டிருந்தாலும் -

அமைதித் தீர்வுக்காக சட்டபூர்வமான அமைப்புக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்துவதை அந்தத் தடை எந்த விதத்திலும் பாதிக்காது என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

லண்டனில் அன்ரன் பாலசிங்கத்துடன் தாங்கள் பேசவிருப்பது குறித்து நோர்வேத் தரப்பு உத்தியோகபூர்வமாக முன்கூட்டியே பிரிட்டனுக்குத் தெரியப்படுத்திவிட்டதாகவும் அறியவந்தது. (உ)

## திவ்வியன் ஆஸ்பத்திரியில்! தோள் மூட்டுக் கழன்றது!!

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்பலகலைக் கழக மாணவன் கி.திவ்வியனின் தோள் மூட்டு சிறைச்சாலையில் நேற்று இடம் பெற்ற இழுபறியில் கழன்றதாகக் கூறப் படுகிறது. அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்செல்வதற்கு நேற்றுக் காலை ஒரு தொகுதி கைதிகள் கைவிலங்கிடப்பட்டு, சங்கிலியால் வரிசையாகப் பிணைக்கப்பட்டு புறப்பட்ட சமயம் கைதிகளுக்கும் சிறைக காவலர்களுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டதாகவும் -

வாய்த்தர்க்கம் முற்றி இருசாராரும் இழுபறிப் பட்டபோது திவ்வியனின் இடது கைத் தோள்மூட்டு கழன்றதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(உ-3-4-9-180)

## மார்ச் முதல் திகதிக்கு முன் அரசமைப்புக் கவுன்ஸில்!

கொழும்பு,ஜன.4

சுதந்திரமான ஆணைக்குழுக் களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமுடைய அரசமைப்புக் கவுன ஸில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னர் அமைக கப்படும்.

- இவ்வாறு தகவல் வெளியிட்டுளளார் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அறிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல், பொலீஸ், பொது நிர்வாகம் மற்றும் நீதி ஆகிய துறைகளை நிர்வகிக்க சுயாதீனமான ஆணைக் குழுக்களை அமைக்கவும் -

அவற்றுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமுடைய அரசமைப்பு

(2ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 'பாஸ்' முறையை தளர்த்த சிபாரிசு

கொழும்பு,ஜன.4

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வவுனியாவில் நடைமுறையில் இருந்துவரும் வதிவிட அனுமதிப் பத்திர முறையை தளர்த்துவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் வன்னி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் 'பாஸ்' முறையில் நிலவும் சிக்கல்கள் குறித்து ஆரா

(2ஆம் பக்கம் பார்க்க)

## வரி அறவிடவும், ஆயுதங்களுடன் நடமாடவும் வவுனியாவில் தமிழ்க் குழுக்களுக்குத் தடை!

### இராணுவம் கண்டிப்பான உத்தரவு

வவுனியா,ஜன.4

வவுனியாவில் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது. வரி அறவிடக்கூடாது. குறிப்பாக வன்னிப் பகுதிக்குப் பொருள்களை ஏற்றிச் செல லும் லொறிகளுக்கு வரி அறவிடப் படக் கூடாது. அந்த லொறிகளுக்கு வரியாகக் கட்டணம் வசூலிப்பதை உடன் நிறுத்தவேண்டும்.

இவ்வாறு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் வன்னி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி.

வவுனியா இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த உத்தரவை அவர் விடுத்தார்.

இக்கலந்துரையாடலுக்கு புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி), ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி), ரெலோ, ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

### நீதிமன்றத்தில் பொலீஸார் கைவிரிப்பு; ஆனால்....

## மதனராஜன், நெப்போலியன் இருவரும் தங்குதடையின்றி தீவுப்பகுதியில் உலா!

யாழ்ப்பாணம்,ஜன.4

நாரந்தனையில் தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜன், ஈ.பி.டி.பி. ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் நெப்போலியன் ஆகியோர் ஊர்காவற்றுறை பொலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இல்லை என்று அந்த பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் தெரிவிக்க -

அதேசமயம், அந்த இருவரும் தீவகத்தில் சாவகாசமாக பல இடங்களிலும் நடமாடி வருகின்றனர்.

மேற்படி இருவரும் தமது பிரதேச எல்லைக்குள் இல்லை என்று ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையப் பொறுப பதிகாரி, ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கூடிய போது நீதிவான் ஆர்.பி. விக்னராஜா முன்னிலையில் தெரிவித தனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### 'சார்க்' மாநாடு இன்று ஆரம்பம்

காத்மண்டு,ஜன.4

- தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'சார்க்' அமைப்பின் உச்சிமாநாடு இன்று நேபாளத்தில் ஆரம்பமாகின்றது.

'சார்க்' அமைப்பின் தற்போதையத் தலைவரான இலங்கை ஜனாதிபதி சந்திரிகா. குமாரதுங்கா, காத்மண்டுவில உள்ள பிரேந்திரா ஸ்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் இந்த உச்சிமாநாடு எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ)

### மார்ச் 6 இல் 'பட்ஜெட்'

கொழும்பு,ஜன.4

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

வரவு - செலவுத் திட்டம் மீதான வவாதம் தொடர்ந்து இடம்பெற்று ஏப்ரல் 11 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும். (உ-3-ரி)

### மீன்பிடித் தடை மூதூரில் நீக்கம்

கிண்ணியா,ஜன.4

மூதூர் பிரதேசத்தில் நடைமுறையில் இருந்துவந்த மீன்பிடித் தடை கடந்த முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசக் கடற்பரப்பில் கடந்த நான்கு மாதங்களாகக் கட்டுவலை மூலம் மீன்பிடிக்க படையினர் தடை விதித்திருந்தனர். (உ)

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு பஸ் சேவைகள் நடக்கும்?

கொழும்பு,ஜன.4

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் தரைப்பாதை திறக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதை அடுத்து -

யாழ்.மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பஸ் சேவைகளை நடத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு மத்திய போக்குவரத்துச்சபை கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தச் சேவைகளை நடத்துவதற்கு தேவைப்படும் பஸ்கள் மற்றும் ஆளணியினர் தொடர்பான விவரங்களை உடன் அனுப்பும்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபையை மத்திய போக்குவரத்துச்சபை கேட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களாக இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3-10-ரி)

### அத்துருகிரியவில் ஆயுதங்கள் மீட்பு:

## நான்கு இராணுவ அதிகாரிகளும் தமிழ்க் குழு உறுப்பினரும் கைது!

கொழும்பு,ஜன.4

அத்துருகிரியவில் இராணுவக் கப்டன் ஒருவரின் வீட்டில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் நால்வர், தமிழ்க்குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர் உட்பட ஐவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் இராணுவ முகாமில் பயன்படுத்தும் 'டேர்மோபெரி' என்னும் நவீன ஆயுதங்களும் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மீட்கப்பட்ட ஆயுதங்கள் ஓர் இராணுவ கப்டன் பயன்படுத்தும்

(2ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் என்ற சந்தேகத்தில்

## பெண் உட்பட 5 ஈழத்தமிழர் தமிழக அகதிமுகாமில் கைது!

சென்னை,ஜன.4

தமிழகத்தில் அகதிமுகாமொன்றில் தங்கியிருந்த ஒரு பெண் உட்பட இலங்கைத் தமிழர்கள் ஐவர் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானமதுரை, மூங்கிலூரணி என்ற இடத்தில் செயற்படும் அகதிமுகாமில தங்கியிருந்த அன்ரன் (வயது 59), கிருஷ்ணகுமார் (வயது 26), மகேஷ் (வயது 26), தமிழ்ச்செல்வன் (வயது

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நான்கு இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆயுதங்களே என்றும் -

அவைதான் அவின் வீட்டில் இருந தன என்றும் -

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் எவரையும் கொல்லும் நோககத்துடன் ஆயுதங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் -

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதேசமயம் -

தேர்தல் தினத்தன்று கண்டி மட வளையில் 10 முஸ்லீம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தினர் கொடுத்த தகவலின் பேரிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்றும் -

ஐ.தே.கட்சியின் தலைவர்களை கொலை செய்யும் நோக்குடன்தான் ஆயுதங்கள் அங்கு வைக்கப்பட்டிருந தன என்று அவர்கள் தெரிவித்தனர் என்றும் -

ஆயுதங்களை மீட்ட குழுவின் பொறுப்பாளரான இராணுவப் பொலீஸ் தலைமையக அதிகாரி கேணல் குல சிறி உடுகம்பொல தெரிவித்தார். (உ-3)

# பேச்சுத் தொடங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எல்.பீரிஸ் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"முரண்பாடுகளற்றதும் பூரணமானதுமான ஓர் ஒழுங்கை - ஒரே ஆவணத்தில் - அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் - ஏற்படுத்துவதே அடுத்த நடவடிக்கையாகும்.

"கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் இந்த விடயத்தில் முக்கியமான பங்கை ஆற்றிவருகின்றது.

"நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். அரசின் அணுகுமுறை மெதுவானதும் உறுதியானதுமாகும்" - என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார்.

"தற்பொழுது ஒருதலைப்பட்சமான இரண்டு போர்நிறுத்தங்கள் உள்ளன. தவிர்க்க முடியாத பரஸ்பர பிரச்சினைகளும் உள்ளன" என்றும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக் காட்டினார். (உ)


தியாக மாமனிதர்

## குமார் பொன்னம்பலம்

அவர்களின் நினைவினைப் போற்றி நிகழ்த்தப்படும்



## அஞ்சலிக் கூட்டம்

இடம்:- திவ்விய ஜீவன மண்டபம், நல்லூர்.
காலம்:- நாளை (05.01.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.30மணி.
தலைவர்:- திரு.சி.வி.கே. சிவஞானம்
(யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

மலரஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலியுரைகள் இடம்பெறும்.

இதற்கு முன்னதாக பி.ப.2.00 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் முன்றிலில் இருந்து தியாகியின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

அனைவரும் அணி திரண்டு வருக! அலையலையாக வருக!
தாய்க்குலமே வருக! தமிழ்க்குலமே வருக!
தியாகத்தைப் போற்றுவோம் வாருங்கள்.

*தியாக மாமனிதர்*
*ஞாபகார்த்தக் குழு.*

(96670)



## அமரர் ஆ.மகாதேவன்

அவர்களின்

## நினைவஞ்சலி நிகழ்வு



இடம்:- யாழ்.இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
காலம்:- நாளை (05.01.2002)
சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி.

அன்னாரின் அன்புள்ளங்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- ஏற்பாட்டுக் குழுவினர்.

(96660)



## கண்ணீர் காணிக்கை

மலர்வு: 19 - 10 - 1947



உதிர்வு: 02 - 01 - 2002

## ஆறுமுகம் மகாதேவன்

*துன்பத்தின் துன்பமோ துயரத்தின் சிகரமோ*
*யாரையார் தேற்றுவது யார்மொழியில் ஆறுவது*
*காட்சியில் எளியன் கருத்தினில் இனியன் -*
*வேதியியல் மன்னன் அடங்கிய பின்னே*
*வேதியியல் உலகம் விக்கித்துப் போய்நிற்க*
*கற்றவர் கண்களில் கண்ணீர் வழிகிறது*

*உன்னால் சிறந்த மாணவர் பலபேர்*
*உன்னால் உயர்ந்த மனிதர்கள் பலபேர்*
*உன்பெயர் சொல்லார் இனிவரும் நாளில்*
*கவலை மறந்து உறங்கலாம் நீ இனி*
*கடவுள் இருக்கிறார் உன்துணையாக*

*கல்விக்கு இனிமேல் ஒருவழி இல்லை*
*கடமைக்கு இனிமேல் கரங்கூறும் இல்லை*
*உண்மைக்கு இனிமேல் உயர்வுகள் இல்லை*
*உயிருக்கு இனிமேல் உணர்வுகள் இல்லை*
*கொற்றவன் மகாதேவா குரல் இனி இல்லையே!*

(C-19025)

*கண்ணீர் காணிக்கைகளை சமர்ப்பிக்கும்*
மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள்.


# நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.இந்துக்கல்லூரியின் முன்னாள் இரசாயனவியல் ஆசிரியரும் யாழ்.கல்வியியற் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளருமான அமரர் ஆ.மகாதேவனின் நினைவஞ்சலிக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-3)

★ ★ ★

இந்துசமயப் பேரவையின் திருவாசக விழா நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு ஏழாலை மேற்கு சிவகாம சுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமாள் ஆலயத்தில் 'அருட்கவியரசு' சி. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகும் இந்த விழாவில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சிவசண்முக வடிவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் 'திருவாசகம் எனும் தேன்' என்ற தலைப்பிலும், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் ந.வி.மு.நவரத்தினம் 'யாழ்ப்பாண ஆன்மீகப் பாரம்பரியமும் திருவாசக முற்றோதலும்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றுவர்.

★ ★ ★

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க நிர்வாக அங்கத்தவர்களுக்கான சந்திப்பொன்று நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு றக்கா வீதியில் உள்ள சங்கச் செயலாளர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு அரச அதிபரைச் சந்திக்கும் போது ஆராயப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக இச்சந்திப்பில் ஆலோசிக்கப்படும்.

இதுவரையும் காணாமற்போன தமது உறவினர்களின் விவரங்களை சங்கத்தில் ஒப்படைக்காதவர்கள் இன்று அல்லது நாளை அந்த விவரங்களை உடனடியாக செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-9)

★ ★ ★

யாழ்மாவட்ட பட்டதாரி பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் உயர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-117)

★ ★ ★

சிறுவர் பாதுகாப்பு நிதிய ஊழியர்களுக்கும் அவர்களுடைய பயிற்சியாளர்களுக்குமான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நல்லூர் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

இந்த கருத்தரங்கில் "சிறுவர்கள் சமாதானத்தின் சரணாலயங்கள்" என்ற தலைப்பில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கொழும்பு தலைமையகத்தின் தகவற்பிரிவு அதிகாரி லயனல் அமரக்கோன் கருத்துரை வழங்குவார். (க-180)

★ ★ ★

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் சேவைபுரிந்து இளைப்பாறிச் சென்றுள்ளவர்களுக்கும் இடமாற்றம் பெற்றவர்களுக்கும் பிரிவுபசார வைபவமும், பாராட்டு வைபவமும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.வலயக் கல்வி அலுவலக நலன்புரிக்கழகத் தலைவர் இ.நாகராஜா தலைமையில் நடைபெறும். (க-51)

★ ★ ★

ஸ்ரீ ராம கிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் அன்னை சாரதா தேவியின் ஜெயந்தி தின விழா நாளை சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் ஜெயந்தி விழா நிகழ்வுகள் நடைபெறும். (க-6)

## மார்ச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கவுன்ஸிலை உருவாக்கவும் -

வழிசெய்யும் விதத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட இருந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக இழுபறி ஏற்பட்டதால் கவுன்ஸில் நியமிக்கப்படுவது தள்ளிப் போயிற்று.

பொதுத் தேர்தலின் பின்னர் பதவி யேற்றுள்ள புதிய அரசு, அந்த அரசமைப்புக் கவுன்ஸிலை உடன் அமைக்கவும் -

அந்தக் கவுன்ஸில் மூலம் சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு மற்றும் சுதந்திரப் பொலீஸ் ஆணைக்குழு ஆகியவற்றை நியமித்து, அவற்றின் கண்காணிப்பின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவும் -

முயற்சி எடுத்து வருகின்றது. (உ-ஒ)


கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl)

**A/L 2003**

** தொடங்கல் **
Sat., Sun.
பிரிவு I : 7 - 8 a.m.
பிரிவு II : 11 - 12 Noon
ஆரம்பம:- 05.01.2002 Sat.

(96589)

விக்னா கல்வி நிறுவனம்


## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யப்பட்டதாகவும் -

அப்போது தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஒ)

# இறால் பதனிடும் தொழில் பெரும் பாதிப்பு

குருநகர்,ஜன.4

குருநகரில் இறால் பதனிடும் தொழில் தொடர்ந்து பெய்த மழையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறாலை அவித்து வெயிலில் காயவிடுவதற்கு மழை தடையாக இருப்பதால் இறாலைக் காய வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (க-51)

## பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
30), சுபாஷினி (வயது 29) ஆகியோரே சிவகங்கை மாவட்ட 'கியூ' பிரிவுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் தமிழ்ச்செல்வனும், சுபாஷினியும் கணவன் - மனைவி ஆவர்.

இவர்கள் 5பேரும் 1997ஆம் ஆண்டு கடல் மார்க்கமாகத் தமிழகம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்ததாகவும் -

பின்னர் அங்கிருந்து மானாமதுரை முகாமுக்குச் சென்று, அங்கு தங்கியிருந்ததாகவும் -

கூறப்படுகிறது.

அகதிகளாகத் தமிழகத்தில் தங்கியிருந்தபோதும், அடிக்கடி இவர்கள் இலங்கைக்கு சென்று வந்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. மானாமதுரை முகாமில் விடுதலைப் புலிகள் தங்கியிருப்பதாகத் தமக்குக கிடைத்த தகவலையடுத்தே அங்கு சோதனை நடத்தி இவர்கள் 5 பேரையும் கைதுசெய்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர் .(ஒ)


## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

★ 26.12.2001 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.
★ எதிர்வரும் 06.01.2002 அன்று படச்சுருள்களும் வீடியோக் கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

புலோலி 070-212720 (96676) நல்லூர் 021-2604



## கண்ணீர் அஞ்சலி

சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலய
2 ஆம் திருவிழா உபயகாரரான

### தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன்

நேற்றுக் காலமான செய்தி கேட்டு கவலையடைகின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*இலுப்பைத்தாழ்வு,*
*முருகமூர்த்தி ஆலயம்,*
*சங்கானை.*

பிரதம குரு, நிர்வாகஸ்தர்,
சங்கானை வாழ் மக்கள்.

(C-19026)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், இளவாலையைச் சேர்ந்தவரும்
கடந்த 44 ஆண்டுகளுக்கும் மேலாக
எமது பாடசாலை சமூகத்திற்கு தொண்டாற்றியவருமான
ஆரம்பப் பாடசாலை முன்னாள் தலைமை ஆசிரியர்

### செல்வி சின்னப்பிள்ளை அருணாசலம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
*கொழும்பு/சைவ மங்கையர் வித்தியாலயம்.*

(C-19048)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 - 09 - 1916



உதிர்வு 14 - 01 - 2001

மலர்வு 21 - 03 - 1927



உதிர்வு 09 - 01 - 2001

அமரர்
**சி.செல்லன்**

திருமதி
**செ.இலட்சுமி**

திதி: 04.01.2002

காலங்கள் நகர்ந்து ஓராண்டு சென்றாலும்
எம்மோடு இருந்து லட்சாதிபதியென்று பெயரெடுத்து
கண்ணை இமை காப்பதுபோல, எமைக்காத்து
அன்பு காட்டி ஆதரித்தீர்
உங்கள் அன்பு நெஞ்சம் மறப்போமா?

(96659)

*செ.முருகையா*
*முதலாம் ஒழுங்கை,*
*அரசடி றோட்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்.

# பிறேஸில் சிறைக் கலகத்தில் முப்பது கைதிகள் உயிரிழப்பு!

பிரேஸிலியா,ஜன.4

பிரேசிலின் வடபகுதியில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் கைதிகளுக்கு இடையே இடம்பெற்ற கலகத்தில் முப்பதுக்கும் அதிகமான கைதிகள் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.



பிறேஸில் கலகம் அடக்கும் பொலீஸார்

அமேஸன் பகுதி மாகாணமான ரொண்டோனியாவின் தலைநகர் போர்டோ வில்கோவில் உள்ள சிறைச்சாலையிலேயே இந்தக் கலகம் இடம்பெற்றது.

கடந்த சில ஆண்டுகளில் பிரேஸிலில் இடம்பெற்ற மிகப்பெரும் வன்முறை இது என பி.பி.ஸி. விவரித்தது.

சிறையில் இருந்த இரு வேறு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட மோதலே கலகத்துக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவித்தனர். காசுக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட பிணக்கே இரு கோஷ்டிகளிடையேயான கலகத்துக்கு காரணம் என்பதை அறியமுடிந்தது என்று பெயர் குறிப்பிட விரும்பாத சிறை அதிகாரி ஒருவர் கூறினார்.

பலத்த சிரமத்தின் பின்னர் பொலீஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

உயிரிழந்த 30 பேரின் சடலங்கள் இதுவரை சிறைக்கட்டடங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கைதிகள் சிறையில் கிடைத்த பொருள்களைக் கொண்டு தாமே உருவாக்கிய ஆயுதங்களால் மோதிக் கொண்டதாலேயே அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கலகத்தை அடுத்து அந்தச் சிறையில் இருந்த கைதிகளில் பலரை வேறு சிறைக்கு மாற்றும் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை -

கலகத்தை அடக்க முயன்ற பொலீஸார் துப்பாக்கிகளாலும் இரும்புப் பாளங்களாலும் தாக்கியதாலேயே பல கைதிகள் உயிரிழந்தனர் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்தப் பிராந்தியத்தில் கைதிகள் மோசமாக நடத்தப்படுவதற்குப் பெயர்போன நாடு பிறேஸில் என்று மனித உரிமை குழுக்கள் குற்றம் சாட்டிவருவது குறிப்பிடத்தக்கது.(ம)

## உலக அரங்கில்


கந்தகார் மலைப் பகுதிகளில் தாக்குதல் முடித்து தளம் திரும்பும் அமெரிக்கப் படையினர்.

# தலிபான் உளவுத் தலைவர் குண்டுத் தாக்குதலில் பலி!

தலிபான்களின் உளவுத்துறை தலைவர் ஹுவாரி அஹமதுல்லா அமெரிக்காவின் விமானக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானின் கிழக்கு மாகாணமான பக்டியாவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களிலேயே அவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் அஹமதுல்லாவுடன் வேறு மூன்று தலிபான் தளபதிகளும் கொல்லப்பட்டதாக தலைநகர் காபூலில் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

"அஹமதுல்லா வேறு 40 தலிபான்களுடன் சேர்ந்து இருந்தபோது கொல்லப்பட்டார். அவர்கள் இருந்த கட்டடத்தை அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டு வீசி அழித்தன" - என்று ஆப்கான் படைகளின் புலனாய்வுத்துறை அதிகாரியான அலிமுல்லா கூறினார்.

அஹமதுல்லாவின் சடலம் கடந்த 31ஆம் திகதியே கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு நான்கு நாள்கள் முன்பாகவே அவர் கொல்லப்பட்டு விட்டார் என்று வேறு ஒரு செய்தி தெரிவித்தது.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானின் புதிய படைகள் தலிபான்களின் பெருந் தலைவர் முல்லாமுகமட் ஓமரை நெருங்கிவிட்டதாகச் செய்திகள் தெரிவித்தன. "இரத்தம் சிந்தாமல் முல்லா ஓமரைக் கைது செய்யவே நாம் விரும்புகின்றோம். இருப்பினும் அவருக்கு அடிப்படைவாத தலிபான் உறுப்பினர்கள் பாதுகாப்பு அளித்து வருகின்றார்கள்" - என்று ஆப்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஓமரைத் தம்மிடம் கையளிக்குமாறு தலிபான் உறுப்பினர்களுடன் தாம் பேச்சு நடத்தி வருவதாக கந்தகாரில் அரச தரப்புப் பேச்சாளர் ஹாஜி குலாலி தெரிவித்தார். (ம)

# ஸம்பியாவின் புதிய அதிபராக மொனவாஸா பதவியேற்றார்

ஸம்பியாவின் புதிய அதிபராக லெவி மொனவாஸா பதவியேற்றுள்ளார். எதிர்க்கட்சியினரும், எதிர்ப்பாளர்களும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


மொனவாஸா பதவியேற்கிறார்

டிசெம்பர் 27ஆம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மொனவாஸா சிறிய வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார்.

ஆனால் தேர்தல் முடிவுகளில் குளறுபடிகள் நடந்துள்ளதாகக் கூறி எதிர்க் கட்சிகள் தேர்தல் முடிவுகளை நிராகரித்துள்ளன.

நேற்றுமுன்தினம் மொனவாஸாவின் பதவியேற்பு வைபவத்தை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 10 பேர் புறக்கணித்தனர்.

புதிய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் புரிபவர்கள் மீது ஸம்பியப் பொலீஸார் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அதிபர் மொனவாஸா எச்சரித்துள்ளார். "நான் சட்டபூர்வமாகவே ஸம்பியாவின் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். நாட்டின் சட்டம் ஒழுங்குக்கு எதிராகச் செயற்படுவோர் இராஜதுரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக நேரிடும்" - என்றும் அவர் கூறினார். (ம)


சர்வதேச எதிர்ப்புக்களையும் மீறி மேற்காசியாவில் இஸ்ரேலிய வான் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன. பலஸ்தீனப் பிரதேசமான காஸாவில் இஸ்ரேலிய ஹெலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இலக்கான பகுதி ஒன்றில் பலஸ்தீன சிறுவர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# காஷ்மீர் தீவிரவாதிகளை கைவிட்டது பாகிஸ்தான்!

## சர்வதேச அழுத்தம் காரணமாக

இஸ்லாமாபாத்,ஜன.4

இந்தியக் கட்டுப்பாட்டு ஜம்மு - காஷ்மீரில் பிரிவினை கோரிப் போராடி வரும் முஸ்லீம் தீவிரவாத அமைப்புகளுக்கு இதுவரை வழங்கி வந்த ஆதரவை பாகிஸ்தான் விலக்கிக் கொண்டுள்ளது.

கடந்த புதனன்று பாகிஸ்தானிய அதிபர் இந்த முடிவை எடுத்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

காஷ்மீரில் போராடிவரும் ஆயுதக் குழுக்களுடனான தொடர்புகள் அனைத்தையும் துண்டிக்குமாறு பாகிஸ்தானிய இராணுவ உளவு அமைப்புக்கு (ஐ.எஸ்.ஐ) அதிபர் பர்வேஷ் முஷரப் உத்தரவிட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

டிசெம்பர் 13ஆம் திகதி இந்திய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலை அடுத்து காஷ்மீர் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு உலக நாடுகள் பாகிஸ்தான் மீது கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தன.


பாக். எல்லையை நோட்டமிடும் இந்தியச் சிப்பாய்.

உலக நாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் முதலில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால் அவை போதுமானவையல்ல என்று இந்தியாவும் உலக நாடுகளும் கருதின. இதனால் பாகிஸ்தான் மீது மேற்குலக நாடுகள் இராஜதந்திர ரீதியில் மேலும் மேலும் அழுத்தங்களைக் கொடுத்தன.

இந்த விடயத்தில் தான் முரண்டு பிடித்தால் உலக அரங்கில் அது இந்தியாவுக்குச் சார்பாகப் போய் விடும் என்று அஞ்சிய பாகிஸ்தானிய அரசு மேற்கு நாடுகளின் அழுத்தங்களுக்குத் தற்போது அடிபணிந்துள்ளது.

லக் ஷர்-இ-தொய்பா, ஜெய்ஷி மொஹமட் ஆகிய அமைப்புக்கள் உட்பட வேறு பல காஷ்மீர் தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

காஷ்மீர்த் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிரான பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை இந்தியா வரவேற்றுள்ளது. இதனை அடுத்து அந்த இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூளக் கூடும் என்ற அச்ச நிலை சற்று நீங்கியுள்ளது. (ம)

# மத்திய கிழக்கு அமைதிப் பணிகளில் மீண்டும் அமெரிக்காவின் பிரதிநிதி!

## விசேட தூதர் ஜெருசலேம் வந்தார்

ஜெருசலேம்,ஜன.4



ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஆரம்பித்த போர் முடிவுக்கு வருவதை அடுத்து, மத்திய கிழக்கு வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

மத்திய கிழக்கில் கடந்த 15 மாதங்களாக பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் தொடரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும்வகையில் மத்திய கிழக்குக்கான தனது விசேட தூதரை அமெரிக்கா மீண்டும் அனுப்பி வைத்துள்ளது.

அமெரிக்காவின் விசேட தூதர் அன்ரனி ஸினி நேற்று ஜெருசலேம் வந்து சேர்ந்தார்.

மத்திய கிழக்கில் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்வது குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்தும் ஸினி பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார் என்று அமெரிக்கா தெரிவித்தது.

அடுத்த வாரம் அமெரிக்கா திரும்பும் ஸினி தனது மத்திய கிழக்கு விஜயம் குறித்து அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின்பவலுக்கு விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்.

ஸினியின் வருகை குறித்து பலஸ்தீன மற்றும் இஸ்ரேலியத் தரப்புக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கின்றன.

"நாங்கள் ஸினியின் வருகை குறித்து எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். இப்பொழுது நாம் சரியான திசையில் செல்கின்றோம். சமாதான முயற்சிகள் அதற்குரிய தடத்துக்கு வந்துள்ளன" - என்றார் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத். (ம)



ஆஸ்திரேலியாவில் கடந்த வாரம் மூண்ட காட்டுத் தீ சிட்னி நகரப் புறநகர் பகுதிக்கு பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

காட்டுத் தீயை அணைக்கும் நடவடிக்கையில் ஹெலி ஒன்று ஈடுபட்டுள்ளதையும் -

தீயில் பொசுங்கிய நிலையில் மீட்கப்பட்ட கரடிக் குட்டி ஒன்றையும் -

படங்களில் காணலாம்.

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவுநாள் சிறப்பிதழ்



1997ஆம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலையின் தோற்றம்




1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாடசாலையின் தோற்றம்



1997ஆம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலையின் தோற்றம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் பல ஆங்கில மொழிமூல பாடசாலைகளை நிறுவி, அவற்றினூடாகக் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். அவ்வாறான பாடசாலைகளில் 1852ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட யாழ்.உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் ஒன்று. இப்பாடசாலை கல்லூரியாக வளர்ச்சிபெற்று உடுப்பிட்டியிலும், அதனைச் சூழ்ந்துள்ள கிராமங்களிலும் வாழ்ந்த மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்துள்ளது.

1852இல் ஆரம்பிக்கப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பல கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கிவந்துள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1986, 1987, 1988 ஆகிய காலப் பகுதிகளில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இக்கல்லூரி, இன்று மீண்டும் அதன் பழைய நிலையை அடைந்திருப்பது மனநிறைவைத் தருகின்றது.

நீண்ட கல்விப் பாரம்பரியத்தை உடைய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, இன்று 150ஆவது ஆண்டில் காலடிவைத்து, வடமராட்சியில் கல்வி ஒளி பரப்பி வருகின்றது.

கல்லூரியின் வளர்ச்சியில் உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் அளப்பரிய சேவையை நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

ஒன்றரை நூற்றாண்டாக கல்வி ஒளிபரப்பும் இக்கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் கல்வி உலகில் ஓங்கி வளரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இ.சிவானந்தன்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

## பழைய மாணவர் சங்க தலைவரின் செய்தி

வடமாகாணத்தின் வடமராட்சி மண்ணில் அமைந்துள்ள உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தனது நூற்றிஐம்பதாவது விழாவினைக் கொண்டாடும் இத்தருணத்தில் ஆசிச்செய்தி ஒன்றினை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலத்தில் எங்கள் கல்லூரி பெருஞ்சாதனைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இச்சாதனைகள் கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டிலும்கூட சாதனை படைத்துள்ளது. கடந்த காலத்தில் போர்ச்சூழல் காரணமாக எமது பாடசாலை இடம்பெயர்ந்து அருகிலுள்ள வீடுகளிலும் காணிகளிலும் இயங்கின. மாணவர் நிலத்தில் இருந்து படித்தார்கள். நாம் பிறந்த மண்ணல்லவா? சாதனைகளைப் படைக்க நினைத்தவனுக்கு இடம் முக்கியமல்ல. அவனது குறிக்கோள் எதுவோ அதுவே அவன் சாதனை படைக்கும் களமாக அமைகின்றது. எமது பாடசாலையில் இருந்து விளையாட்டு மைதானம் தொலைவில் இருந்தாலும் விளையாட்டிலும் மாணவர்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டாக மாவட்ட, மாகாண மட்டங்களில் அவர்கள் பரிசுகட்டிபெறும் வெற்றிச் சின்னங்களே அதற்கு அடையாளமாக விளங்குகின்றன. பாடசாலையின் வளர்ச்சி, அப்பாடசாலையில் ஆசிரியனும் மாணவனும் வைத்துள்ள பற்றிலேயே தங்கி உள்ளது. இதற்குச் சான்று பகர்வதாக எமது பாடசாலை விளங்குகின்றது.

எமது பாடசாலையில் கல்வி பயின்றவர்கள் இன்று கல்விமான்களாகவும், பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும், கணக்காளர்களாகவும், ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர். இப்பாடசாலையில் படித்து, இவர்கள் இவ்வாறான துறைகளில் பணியாற்றுவதற்கு ஏணிப்படிகளாக அமைந்த இடந்தான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. இக்கல்லூரி பல கல்விமான்களையும், பல சாதனைகளையும் எமது மண்ணுக்காகப் படைக்கும் என்பதில் ஐயமில்லை என் பறைந்தெரிவிப்பதோடு, எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும், இறைவனின் நல்லாசியையும் வேண்டிநிற்கின்றேன்.

பேராசிரியர் அ.நவரட்ணராஜா
தலைவர்,
ப.மா.ச.யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

## கல்லூரியின் வரலாற்றுச் சுருக்கம்

மேற்கு நாடுகளிலிருந்து மதம் பரப்பவந்த கிறிஸ்தவப் பாதிரிமார் தமிழ் மொழியின் வளம் பெருகவும், தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது உழைத்துள்ளனர். 1847ஆம் ஆண்டு அமெரிக்க - இலங்கை மிஷன் உடுப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டதாயினும், 1850ஆம் ஆண்டளவில் தென்னிந்தியத் திருச்சபையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் கனம் பெஞ்சமின் டமெக்ஸ் அவர்கள் ஊழியம் செய்தகாலத்தில் (04-01-1852ஆம் ஆண்டில்) இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, அதன் முதல் ஆசிரியராக சாள்ஸ் ஜென்கினற் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இக்கல்லூரி ஆரம்ப காலத்தில் இரண்டு பகுதிகளாக இயங்கிவந்தது.

1. சுயபோதனா மொழி பாடசாலை
2. ஆங்கிலமொழி போதனா பாடசாலை.

சுயமொழிப் பாடசாலை 8ஆம் வகுப்புவரையும், ஆங்கிலமொழிப் பாடசாலை 5ஆம் வகுப்புவரையும் இயங்கிவந்தது. ஜே.எஸ்.அம்பலவாணர் சுயமொழிப் பாடசாலையின் விருத்திக்குக் கடினமாக உழைத்தவர். வி.கே.சின்னத்தம்பி ஆங்கில மொழிப் பாடசாலையின் விருத்திக்காக உழைத்தவர். 1932ஆம் ஆண்டில் எஸ்.கே.இராசையா அதிபராக இருந்தகாலத்தில் ஆங்கிலமொழிக் கல்வி 8ஆம் வகுப்புவரை விஸ்தரிக்கப்பட்டது. இக்காலத்தில் அணுசக்தித்துறை விஞ்ஞானி கலாநிதி கந்தையாவும், நீதியரசர் சிறீஸ்கந்தராஜாவும் இக்கல்லூரியினால் உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த மாணவர்களாவர்.

1939ஆம் ஆண்டளவில் இந்தியாவின் கேரளப்பகுதியைச் சேர்ந்த கே.ரி. ஜோன் கல்லூரியின் முகாமைத்துவப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் இருமொழிப் பாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு 'உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி' என்ற பெயரில் இயங்கிவரலாயிற்று. இந்நிகழ்வைத் தொடர்ந்து 05-01-1945இல் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர (S.S.C.) வகுப்புக்களைக்கொண்ட கல்லூரியாகத் தரமுயர்ந்தது. இவரது காலத்தில் முதன்முதலாக சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் பின்வரும் மாணவர்கள் மிகத்திறமையான முறையில் சித்தியடைந்தனர்.

திரு.ஆர்.விஜயரட்ணம், திரு.ஆர்.அன்னலிங்கம் திரு.வி.கே.அரியரட்ணம், திரு.வி.செல்வரட்ணம், திரு.வி.அரியரட்ணம் "ஒளி இருளை அகற்றும்" (LIGHT DISPELS DARK) என்ற கல்லூரியின் மகுடவாசகம் கே.ரி.ஜோன் அவர்களால் உருவாக்கப்பட்டது. இவரது காலத்தில்தான் மண் பொறியியல் விஞ்ஞானி பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் உருவாக்கப்பட்டனர்.

கல்வித்துறை மட்டுமன்றி விளையாட்டுத்துறை, சாரணியத்துறையிலும் கல்லூரி சாதனை பல நிகழ்த்தியது. யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற சாரணிய பாசறைப் போட்டிகளில் பல தடவைகள் முதலாமிடத்தையும் அகில இலங்கையிலும் பல தடவைகள் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டது. இலங்கை தேசாதிபதியின் விருது மாத்திரமன்றி, இங்கிலாந்து சென்று மகாராணியிடமிருந்து சாரணருக்கான பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக 1939இலிருந்து 1956ஆம் ஆண்டுவரை கல்லூரி வடமராட்சியில் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

திரு.எஸ்.செல்லத்துரை 1956இல் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டதும் முதல் நடவடிக்கையாக உயர்தர வகுப்புகள் நடத்துவதற்கான அனுமதி பெறப்பட்டது. 1971ஆம் ஆண்டுவரை இவரது தலைமையில் கல்லூரி பல்துறைகளிலும் அடைந்த சாதனைகள் இக்குறிப்பிட்ட சிறிய கட்டுரையில் எடுத்துக்காட்டுவது இயலாது. பல்கலைக்கழக அனுமதிக்கு தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் செல்வோர் எண்ணிக்கை கல்லூரியைப் பொறுத்தவரை பாதிக்கப்படவில்லை.

1972 முதல் 1997 வரை ஏறக்குறைய 26 வருடங்களில் 14 அதிபர்கள் பாடசாலை நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர். அதேசமயம் 1987இல் நடைபெற்ற வடமராட்சி படை இயக்க நடவடிக்கைகள் கல்லூரியை முற்றாகச் சேதமாக்கியது. வகுப்பறைக் கட்டடங்கள் இடிக்கப்பட்டன. மிகச் சிறந்த ஆய்வு கூடமும், வடமராட்சியிலேயே மிகப் பெரிதாக இயங்கிய நூலகமும் எரிக்கப்பட்டன. இக்கால கட்டத்தின் பின்னர் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் திரு.கே.சிதம்பரப்பிள்ளையும், திரு.என்.அனந்தராஜ் ஆகிய இருவரும் அதிபராக இருந்து தற்காலிகக் கொட்டகையின் கீழ் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் முனைப்பாக நின்று தொழிற்பட்டனர்.

1997ஆம் ஆண்டின் பின் மீண்டும் கல்லூரியின் கல்வி மறுமலர்ச்சி ஒன்று ஏற்படுவதற்கான துலங்கல்கள் தென்படுகின்றன. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவி மறக்கப்படக்கூடியதன்று. பழைய மாணவர் சங்கம், அதன் கனடா, கொழும்பு கிளைகள் ஆற்றிவரும் பணிகள் மகத்தானவை. கல்வித் திணைக்களமும் கல்லூரி வளர்ச்சியில் அனுசரணையாகவுள்ளது. கல்லூரி அபிவிருத்திச் சங்கமும் சிறந்தமுறையில் இயங்கிவருகின்றது.

*'இது எனது பாடசாலை*
*பாடசாலையினால் நான் உயர்வடைய வேண்டும்*
*என்னால் பாடசாலை உயர்வடைய வேண்டும்'*

இதுவே இக்கல்லூரியின் தாரகமந்திரம்.

## மேலதிகக் கல்விப்பணிப்பாளரின் செய்தி

யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு பெரும்பங்கு உள்ளது என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அவ்வகையில் தென்னிந்திய திருச்சபை நிர்வாகத்தின் கீழ் உடுப்பிட்டிக்கிராம மக்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு ஆங்கில போதனா பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி காலப்போக்கில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி என்ற பெயரைப் பெற்று 150ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வடமராட்சியின் மிகப் பிரபல்யமான பாடசாலையாகவும், யாழ். மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகவும் இக்கல்லூரி விளங்குகின்றது. நீதியரசர் சிறீஸ்கந்தராஜா, அணுசக்தி விஞ்ஞானி கந்தையா, பருத்தித்துறைத் தொகுதியின் சுதந்திர இலங்கையின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், மண் பொறியியல் விஞ்ஞானி பேராசிரியர் துரைராஜா போன்றவர்களையும், இவர்களைப்போன்று எண்ணிலடங்கா சான்றோர்களையும் இக்கல்லூரி உருவாக்கி இருக்கின்றது. தேசியரீதியில் சாரணியத்துறையில் பல தடவைகள் தேசாதிபதியின் விருதினையும் பெற்றிருக்கின்றது.

1987ஆம் ஆண்டு வடமராட்சி படை இயக்கத்தின்போது இக்கல்லூரி முற்றாகவே சேதமாக்கப்பட்டது. தற்காலிகக் கொட்டகையின் கீழ் இயங்கி வந்த பரிதாபநிலைகண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இருமாடிக் கட்டடம் ஒன்றையும், அடிப்படைத் தேவைகளையும் கல்லூரிக்கு வழங்கியிருக்கின்றது.

மீண்டும் கல்லூரியின் பழைய வரலாறு மறுமலர்ச்சியடையும் தன்மையில் தற்போது கல்லூரி பீடுநடைபோடுகின்றது. கல்லூரி மேன்மேலும் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சிபெற்று பல்லாயிரம் ஆண்டுகள் கல்விப் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ரீ.சிவராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி வலயம்.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் பூர்த்தியாவதனையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன், கடந்த காலத்தில் கல்லூரி மைந்தர்கள் ஈட்டிய சாதனைகளைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்திலும் வளம்பெற கடுமையாக உழைத்திடுவோம் என உறுதியெடுத்து வாழ்க! வளர்க! என வாழ்த்துகின்றேன்.

கி.நடராசா
அதிபர்.

## உயிர்வாழும் கலைக்கூடம்

நூற்றியைம்பது ஆண்டுகள் ஒரு மனிதன் உயிர்வாழமுடியாது. ஆனால் மனிதர்களை உருவாக்கி அதன்மூலம் சமூகத்தைப் பொலிவுறச் செய்த கல்வி ஸ்தாபனம் பல லட்சம் ஆண்டுகள் வாழும். ஏனெனில் இன்னல்கள், இடையூறுகளின் மத்தியிலும் உருவாக்கியவர்களின் தோள்மீது நின்று வானைத் தொடக்கூடியதாக, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது. இப்பெருமை இங்கு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெருமையுடையதாக உள்ளது. இக்கலைத்தாய் இனிவரும் காலங்களில் மெருகூட்டப்பட்டு அதன் சேவையை மேற்கொள்ள எனது பிரார்த்தனைகள்.

வே.தி.செல்வரத்தினம்,
பழைய மாணவன், முன்னாள் அதிபர்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

உதயன்

## ஈ.பி.டி.பியின் கேள்விக்கு என்ன பதில்?

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியில் வாழும் மக்களுக்கு எடுத்துச்செல்லப்படும் பொருள்களுக்கு வரி அறவிடப்படும் சட்டவிரோதச் செயலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளே சட்டத்திற்குப் புறம்பான வகையில் இந்த வரியை அறவிடுகின்றன. குறிப்பாக வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு லொறியும் சுமார் பதினோராயிரம் ரூபாவை இவ்வாறு சட்டவிரோத வரியாகச் செலுத்த நிர்ப்பந்திக்கப்படுகின்றது என்று ஈ.பி.டி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இதேபோன்ற குற்றச்சாட்டை இதே பத்தியில் தேர்தல் காலத்தில் நாமும் முன்வைத்திருந்தோம். தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் மக்களிடம் வாக்குக்கேட்க முன்னர், இந்தவிடயம் குறித்துத் தங்களது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனக் கோரியிருந்தோம்.

ஆனால் 'அம்சடக்காக' மௌனம் சாதித்து, மக்களின் தலையில் மிளகாய் அரைத்து, வாக்குகளையும் சுருட்டிக்கொண்டு, நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட கட்சிகள், தொடர்ந்தும் இந்தக் கேவலமான காரியத்தைச் செய்வது படுமோசமான செயலாகும்.

ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் என்று கூறி ஜனநாயகக் கட்சிகளாகத் தங்களை வெளியே பிரகடனப்படுத்திக்கொள்ளும் தமிழ்க் குழுக்கள் -

ஈ.பி.டி.பி. மற்றும் வரதர் குழு போன்றவற்றை ஜனநாயக விரோத - தமிழ் விரோத - சக்திகள் என்று வர்ணிக்கும் கட்சிகள் -

விடுதலைப் புலிகளின் புனிதம் மிக்க ஈகைப் போராட்டத்தை முன்னிறுத்தி, அதன் தியாகத் தீயில் குளிர் காய்ந்து - புலிகளைத் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்று காட்டுவதற்காக நாடாளுமன்றம் செலகின்றோம் என்று கூறிக்கொண்டு, அதன் பேரில் நாடாளுமன்றக் கதிரைகளை எட்டிப்பிடித்த கட்சிகள் - தொடர்ந்தும் மக்களை மிரட்டி கப்பக் கலாசாரத்தைப் பின்பற்றுவது மிகவும் ஈனச்செயலாகும்.

சிங்கள ஸ்ரீலங்கா அரசிடம் துணைப்படை என்ற பெயரில் மாதாந்தம் பல லட்சம் ரூபாவை வேதனமாக வாங்கிக்கொண்டு அதன்மூலம் கட்சி - இயக்கம் - நடத்துவதை விட -

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களிடம் - தற்போதைய அரசியல் சூழ்நிலைமையைப் பயன்படுத்தி - தண்டமும், கப்பமும் அறவிட்டு ஜனநாயகத்தின் பெயரால் அரசியல் நடத்துவது மிகமிகக் கேவலமானதாகும்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள ஒரு சில கட்சிகள் குறித்துப் பத்திரிகைகளும், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகளும் இவ்வளவு தூரம் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிய பின்னரும், கூட்டமைப்பிலுள்ள ஏனைய ஜனநாயகக் கட்சிகள் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது, அவையும் இந்தக் கேவலமான - ஜனநாயக விரோத - செயலுக்குத் துணைபோவதையே எடுத்துக்காட்டுவதாக அமையும் என்பதை அவை உணர்ந்துகொள்ளவேண்டும்.

வெள்ளைத் தாளில் வெறும் மறுப்பு அறிக்கை விடுவதில் அர்த்தமில்லை. உண்மையில் - யதார்த்தத்தில் - தங்களது நேர்மையான செயற்பாட்டை இக்கட்சிகள் - குழுக்கள் - மக்களுக்கு நிரூபிக்கவேண்டும்.

அப்பாவி மக்களை மிரட்டி சட்டவிரோதமாகத் தண்டம், கப்பம் அறவிடும் கட்சிகளைவிட -

அரசிடமிருந்து மக்களுக்கு வருகின்ற - வரவேண்டிய - நிதியை இடையில் தட்டிச்சுருட்டும் குழுக்கள் எவ்வளவோ மேல் என்ற முடிவுக்கு மக்கள் வரவேண்டியிருக்கும் என்பதையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உணரவேண்டும்.

சட்டவிரோதமாக வரி அறவிடும் குழுக்களின் பிரதிநிதிகளாக - தலைவர்களாக - இருந்துகொண்டு கொள்கை, இலட்சியம், போராட்டம் என்று பேசும ஜனநாயகவாதிகள் ஈ.பி.டி.பி. வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்கு சரியான பதிலைத் தரவேண்டும். பதிலில் இருக்கும் விடயங்கள் உண்மையாகவும் இருப்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

---

யாழ்.மாநகர சபையால்

# சித்த மருத்துவ மருந்தகம் அரியாலையில் திறப்பு

யாழ்.மாநகர சபை மருத்துவப் பிரிவின் உதவியுடன் மகப்பேற்று நிலையமும், சித்த மருத்துவ மருந்தகமும் நேற்றுமுன்தினம் அரியாலை கலைமகள் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் யாழ்.மாநகர சபைப்பிரதிமேயர் செல்லன் கந்தையனால் திறந்துவைக்கப்பட்டது.

மாநகர சபையின் கீழ் இயங்கவுள்ள இம்மருந்தகத்தின் திறப்பு விழா நிகழ்வு மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாநகரசபை உறுப்பினர்களான மனுவேல் மங்களநேசன், எஸ்.தவநாதன், கிங்ஸ்லி கணேசன், ரி.கனகரட்ணம், எட்வேட் மோசஸ், இரட்ணசபாபதி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர். (க-8)

---

## நாட்டு நடப்பு

### காணக் கொடுத்துவைத்த காரிகை

*தடித்த உடலும் தள்ளாடும் மேனியின் தனிச் சிரிப்பும்*
*அடித்த கசிப்பும் அங்கமெலாம் புரண்டு அடிபட்ட காயங்க*
*வடித்த கசிப்பை வலக்கையில் ஏந்திவரும் காட்சியும் கண்டால்*
*முடித்த மனையாளும் வசிப்பளோ புதிச வீட்டினிலே*

*- விகடகவி.*

---

அமைச்சர் மகேஸ்வரன் அறிவுறுத்தல்:

# அரசியல் மற்றும் படையினர் தலையீட்டை அரச நிர்வாகத்தில் அனுமதிக்காதீர்கள்!

## அதிகாரிகளுடனான சந்திப்பில் விவரமாக எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.4

அரச நிர்வாக விடயங்களில் அரசியல் தலையீடு மற்றும் படை அதிகாரிகளின் தலையீட்டை அனுமதிக்கவேண்டாம். அரசியல் தலையீடற்ற நிர்வாகம் யாழ்.குடாநாட்டில் உருவாக சகல பிரதேச செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

யாழ்.குடாநாட்டில் உள்ள அரச அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். கண்டி வீதியில் "றான்" விடுதியில் நடைபெற்றது. யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் உட்பட சகல பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மகேஸ்வரன் இந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவித்ததாவது:-

### பிரதேச செயலர்களே முழுப் பொறுப்பு

☆ தத்தமது பிரதேசங்களின் வீதிகள் புனரமைப்பு, போக்குவரத்து, எரிபொருள் விநியோகம், மின்சாரம், மருந்து விநியோகம், கல்வி மற்றும் முக்கிய விவகாரங்கள் குறித்து பிரச்சினைகள் ஏற்படும்போது உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டிய முழுப் பொறுப்பு பிரதேச செயலாளர்களுக்கே உரியது. இதில் மக்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் பதில் கூற வேண்டியவர்கள் அவர்களே.

☆ பாதுகாப்பு அனுமதி பெறுவதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு எடுத்துக்கூறுவதும், தீர்வைப் பெற்றுக்கொடுப்பதும் பிரதேச செயலர்களின் முக்கிய கடமை.

மரணச் சடங்கு, நேர்முகப் பரீட்சை முதலிய அவசிய தேவைகளின் நிமித்தம் தென்னிலங்கைக்குச்செல்ல வேண்டியவர்களுக்கான பாதுகாப்பு அனுமதி, பயணச் சீட்டு முதலிய சகல ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களின் முக்கிய கடமை. இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சனிக்கிழமைகளிலும் பிரதேச செயலர்கள் பணியாற்றவேண்டும்.

### கட்சி அலுவலகங்களுக்கு ஓடத் தேவையில்லை

எனவே மேற்படி விவகாரங்களுக்காகப் பொதுமக்கள் அமைச்சரிடமோ கட்சி அலுவலகங்களுக்கோ அலைந்து திரியவேண்டிய நிலை இனிமேல் ஏற்படக்கூடாது. பிரதேச மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்ய வேண்டியது பிரதேச செயலர்களின் கடமையாகும்.

பாதுகாப்பு அனுமதி குறித்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புகொள்ளக் கூடியவாறு குடாநாட்டில் உள்ள சகல பிரதேச செயலர்களினதும் மாதிரிக் கையொப்பம் பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

☆ யாழ்.குடாநாட்டில் அரச திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளையும் பிரதேச செயலர்களே மேற்கொள்ளவேண்டும். பிரதேச ரீதியாக வேலையின்றி இருப்போரின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, கல்வித் தகைமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படுவதை பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தவேண்டும். இந்த நியமனங்களில் எந்த வகையான அரசியல் தலையீடுகளும் இருக்கக்கூடாது.

☆ யாழ்.குடாநாட்டில் உள்ள பிரதேச செயலர் வெற்றிடங்கள் அனைத்தும் உடனடியாக நிரப்பப்படும். இதன மூலம் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும்.

### படையினர் அழைக்கும் கூட்டங்களுக்குச் செல்லாதீர்!

☆ படையினர் சிவில் நிர்வாக விடயங்களில் ஈடுபட அரச அதிகாரிகள் இடமளிக்கக்கூடாது. அதுமட்டுமன்றி படையினர் ஏற்பாடு செய்யும் கூட்டங்களுக்கும் அதிகாரிகள் செல்லக்கூடாது. திணைக்களங்களுக்குச் சொந்தமான வாகனங்களைப் படையினரின் தேவைகளுக்காக வழங்கவும் கூடாது.

★ பிரதேச செயலர் பிரிவு ரீதியாக உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்களை பிரதேச செயலர்கள் தயாரித்து வழங்கவேண்டும். புதிய வரவு - செலவுத் திட்டத்தில் இவற்றுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### கோதுமை மா தேவையா?

★ யாழ்.ப.நோ.கூ. சங்கத்தினரும் தனியார் வர்த்தகர்களுமே குடாநாட்டுக்குக் கோதுமை மாவைக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். ஏனைய சங்கங்களும் மாவைக் கொள்வனவு செய்யவிரும்பினால் உடனடியாக நாலாயிரத்து 500 மெற்றிக் தொன் கோதுமை மாவை யாழ். எடுத்துவர ஏற்பாடு செய்வேன்.

★ படையினரின் பாவனையில் இருக்கும் 20 பஸ்களை வ.பி.போ. சபையிடம் உடனடியாகக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த பஸ்கள் கிடைத்தவுடன் இதுவரை சேவை இடம்பெறாதுள்ள இடங்களுக்கும் பஸ் சேவையை விரிவுபடுத்தக்கூடியதாக இருக்கும்.

### இந்துக் குருமார்களுக்கு பஸ்களில் இருக்கை

★ வ.பி.போ.சபைக்குச் சொந்தமான பஸ்களில் மதகுருமார் அமர்ந்து பயணம் செய்வதற்கென விசேட இருக்கைகள் உள்ளன. எனினும் அந்த இருக்கைகள் இந்துமதக் குருமாருக்கு வழங்கப்படுவதில்லை. எனவே இந்துமதக் குருமார் தமக்குரிய இருக்கைகளில் இருந்து பயணஞ் செய்யக்கூடியவாறு வ.பி.போ.சபையின் பொது முகாமையாளரும், அவரது நிர்வாகத்தினரும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுமக்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

★ யாழ்.ஆஸ்பத்திரியில் இந்து குருமார் தங்கி சிகிச்சை பெறுவதற்கென தனியான "வாட்" ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதுகுறித்து ஆஸ்பத்திரிப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டுள்ளேன்.

### புனரமைப்பு நிதி

★ கடந்த காலங்களில் குடாநாட்டில் சேதமடைந்த, முற்றாக அழிவடைந்த வீடுகளைப் புனரமைக்கவென சொற்பமான நிதியே வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி வீடுகளுக்குத் தேவையான எந்தவொரு பொருளையும் கொள்வனவு செய்வதற்கோ அல்லது வீட்டின் ஒரு பகுதியைக் கட்டுவதற்கோ போதுமானதாக இருந்ததில்லை.

இந்த சொற்ப நிதியை அரச அதிகாரிகள் சிபார்சு செய்து பெற்றுக்கொடுத்ததன் மூலம் நடந்தது என்ன? - சாதித்ததுதான் என்ன?

எனவே புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா யாழ்.விஜயம் செய்யும்போது சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களை அவருக்கு நேரடியாகக் காண்பிக்கப்படவேண்டும்.

அமைச்சர் நேரடியாகச் சேதங்களைப் பார்வையிடுவதன் மூலம் வீடுகள் மற்றும் கட்டடங்களின் புனரமைப்புக்குத் தேவையான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை முழுமையாக வழங்க ஏதுவாக அமையும். சேதங்கள், நஷ்டங்களை அமைச்சரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்.

### மின் விநியோகம் விரைவில் சீராகும்

★ பழுதடைந்துள்ள மின்பிறப்பாக்கிகளை 20 நாள்களுக்குள் திருத்தி, மின் விநியோகத்தைச் சீர் செய்ய சூல் எயார் நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதுமட்டுமன்றி இதுவரை காலமும் மின்விநியோகம் வழங்கப்படாதுள்ள இடங்களுக்கும் மின் விநியோகம் வழங்கப்படவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் - என்றார் அமைச்சர்.

---

அச்சுவேலிப் பிரதேசத்தில்

# மூடப்பட்ட 3 பாடசாலைகளின் எதிர்காலம் குறித்துக் கவலை

## பழைய மாணவர்கள் ஆவணங்கள் பெற அவதி

அச்சுவேலி,ஜன.4

அச்சுவேலிப் பகுதியில் நீண்டகாலமாக மூடப்பட்டிருக்கும் மூன்று பாடசாலைகளின் எதிர்காலம் குறித்து பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

அச்சுவேலிப் பிரதேசத்தில் வளலாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, அச்சுவேலி வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, பத்தமேனி விபசி வித்தியாலயம் ஆகியனவே செயற்படாமல் மூடிக்கிடக்கின்றன.

இவற்றில் இரண்டு பாடசாலைகள் தரம I பாடசாலையாகவும் மற்றது ஆரம்ப பாடசாலையாகவும் செயற்பட்டுவந்தன. இவை 1996ஆம் ஆண்டு மீளக்குடியேறிய பின்னர் மூடப்பட்டன.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் மேற்படி பாடசாலைகளில் படித்த பழைய மாணவர்கள் தமது விடுகைப்பத்திரம், சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டு அலைந்து திரிகின்றனர்.

அச்சுவேலிப் பகுதியில் தற்போது ஏழு பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றன. (க-11)

---

# சேதமடைந்த ஆலய தேர் மணிகளும் திருட்டு!

தென்மராட்சி,ஜன.4

ஆலயத்தின் தேரில் பொருத்தப்பட்டிருந்த 250இற்கு மேற்பட்ட மணிகள் விசமிகளால் திருடப்பட்டுள்ளதாகப் பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயத்திற்கு 1999ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்ட சித்திரத் தேரில் பொருத்தப்பட்டிருந்த மணிகளே திருட்டுப் போயவிட்டன.

இடம்பெயர்வின் பின்னர் கல்வயல் பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் ஆலய பரிபாலன சபையினர் விசேட அனுமதி பெற்று கடந்த சனிக்கிழமை அங்கு சென்றிருந்த சமயம் திருட்டு இடம்பெற்றிருந்ததைக் கண்டனர்.

ஷெல்வீச்சுக்களால் ஆலயம் பலத்த சேதமடைந்துள்ளதால் வாகனங்களும் பழுதடைந்துள்ளன என்றும் பெறுமதிமிக்க பொருள்கள் எவையும் அங்கு காணவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (க-117)

---

## உதயவாக்கு

சிலரே, மிகச் சிலரே, தங்கள் தவறுகளை ஒப்புக் கொள்வர்.

---

## நாளை

மார்கழி 21
சனிக்கிழமை
(05-01-2002)
திதி : ஸப்தமி
பின் இரவு 2.48 வரை.
நட்சத்திரம்: உத்தரம்
பிற்பகல் 5.42 வரை.
சுபநேரம் : 3.31 - 5.01
ராகுகாலம் : 9.31 - 11.01
(பழைய நேரப்படி)



# அனைத்து இலங்கையர்களுக்கும்

ஜனவரி முதல் நாள் 2002இல் பிறக்கும்
புத்தாண்டு சமாதானத்தின் நம்பிக்கையையும்
சகவாழ்வின் தாற்பரியத்தையும் நமக்கு
வழங்கும் ஆண்டாக மலர்கிறது.

எதிர்காலத்தை நாம் நோக்கும்போது,
மோதல் தவிர்ப்பு எமக்கு ஆறுதலையும்
நம்பிக்கையையும் அளிக்கிறது.
இந்நிலையில் 2001 செப்ரெம்பர் 19இல், நம்மில்
பல இலட்சக் கணக்கானோர் ஒன்றிணைந்து
கைகோத்து, சமாதானத்தின் வேட்கையை
வெளியிட்டதை நாம் நினைவு கூருகிறோம்.

அரசியல் தலைவர்களுக்கும் சமயப்
பெரியார்களுக்கும் ஏனையோருக்கும் இனி
நம்பிக்கை தரும் நல்ல தருணம்
உருவாகியுள்ளது. சமாதானத்தை
நம்நாட்டில் நிலைநிறுத்த நாம்
தொடர்ந்தும் பாடுபடுவோம். சமரசம் செய்து
நாம் ஒன்றிணைவோம். அமைதி நிறைந்த
இலங்கையிலேயே சுபீட்சம் மலரும்.

இதைவிட எதைத்தான் நம் குழந்தைகளின்
எதிர்கால நல்வாழ்விற்காக நாம் நாடியும்
தேடியும் செல்லப் போகின்றோம்...?

**ஸ்ரீ ලංකා First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

இணையத் தளம் : www.srilankafirst.com

(C20087)

## அமைச்சர் ஜயலத்துக்கு அரச அதிபர் கடிதம்

# முல்லைத்தீவில் 10 ஆயிரம் குடும்பங்கள் கடும் மழை காரணமாகப் பாதிப்பு!

## இன்னும் நிவாரணம் ஏதும் கிடைக்கவில்லை!!

வவுனியா,ஜன.4

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 10 ஆயிரத்து 500 குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று முல்லைத்தீவு அரச அதிபர் எஸ்.சுந்தரம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்த விவரமான கடிதம் ஒன்றையும் அவர் நேற்றுமுன்தினம் புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடும் மழையினால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 6 ஆயிரத்து 64 குடும்பத்தவர்கள் இடம்பெயர்ந்து தற்காலிகக் குடிசைகளில் வசித்து வருகின்றனர். ஏனைய 4 ஆயிரத்து 466 குடும்பத்தவர்கள் நிரந்தர வசிப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வசித்து வருகின்றனர்.

ஆயிரத்து 180 குடும்பத்தவர்களின் வீடுகள் முற்றாகச் சேதம் அடைந்துவிட்டன. 2 ஆயிரத்து 198 குடும்பத்தவர்களின் வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளன.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 618 குடும்பங்களுக்கும், பகுதியான பாதிப்படைந்த 4 ஆயிரத்து 546 குடும்பங்களுக்கும் இது வரை உலர் உணவு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரத்து 586 குடும்பங்களும் -

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவைச் சோநத 4 ஆயிரத்து 207 குடும்பங்களும் -

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த 250 குடும்பங்களும் -

துணுக்காய் அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 291 குடும்பங்களும் -

இவ்வாறு உலர் உணவு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## வயோதிபத் தம்பதியரை அச்சுறுத்தி

# முகமூடிக் கொள்ளையர்கள் நவக்கிரிப் பகுதியில் சூறை!

தனியாக வீடு ஒன்றில் வசித்த வயோதிபத் தம்பதியர்களை நள்ளிரவில் கத்தியைக்காட்டி அச்சுறுத்திய கொள்ளையர்கள் அவர்களிடமிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் ரொக்கப்பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகரச் சம்பவம் கடந்த 24ஆம் திகதி நவக்கிரி மேற்கில் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் வனத் திணைக்கள அதிகாரியான பொன்னம்பலம் துரை ஐயா என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நள்ளிரவு 11 மணியளவில் வீட்டினுள் நுழைந்த நான்கு பேரடங்கிய கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியர்களை கத்தி முனையில் தடுத்து வைத்துவிட்டு வீட்டைச் சோதனையிட்டுள்ளனர்.

பின்னர் அங்கிருந்த 12 பவுண் நகை, 5ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் மின்சார உபகரணங்கள், உடுபுடைவைகள் என்பனவற்றை மூடையாகக் கட்டி வீட்டில் இருந்த சைக்கிளில் அந்த மூடையை எடுத்துச்சென்றுள்ளனர்.

உணவுப் பொருள்கள், பால்மா வகைகள், உள்ளாடைகள் என்பனவற்றைக்கூட கொள்ளையர்கள் விட்டு வைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

மேற்படி கொள்ளைச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடர்கள் கறுப்பு நிற உடைகளை அணிந்தவாறு முகமூடியுடன் காணப்பட்டனர் என்றும்-

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தமக்குள் உரையாடினர் என்றும் - கூறப்பட்டது.

கடந்த 24ஆம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முன்னிட்டு குடாநாட்டில் இரவுநேர ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருந்த போதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ம-7-11)

# விவசாயிகள் ஓய்வூதியம் விரைவில் அதிகரிக்கப்படும்

## காப்புறுதிச் சபை செயலர் தெரிவிப்பு

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் ஆயிரம் ரூபா ஓய்வூதியக் கொடுப்பனவை மூவாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பிலுள்ள விவசாயக் காப்புறுதிச்சபையின் செயலாளர், மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் விலைவாசி உயர்வுகளுக்கு ஏற்றவிதத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குவதற்கு ஆவண செய்யப்பட வேண்டும் என்று வேண்டுகோள்விடுத்து மேற்படி சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.ம.க. முதலியார் கடந்த நவம்பர் மாதத்தில் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்தார். இதனை அடுத்து இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலர், கமத்தொழில் அமைச்சின் செயலர் மற்றும் விவாசயக் காப்புறுதிச் சபை செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலம் பணிப்புரை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து ஓய்வூதியத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயக் காப்புறுதிச் சபையின் செயலாளர், விவசாயிகள் சம்மேளனத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் அந்தக் கடிதம் முழுச் சிங்களத்திலேயே அச்சிட்டு அனுப்பப்பட்டுள்ளது. (ம-135)

### கச்சாய்ப் பாடசாலை மீண்டும் அதே இடத்தில்!

கச்சாய் அ.த.க. பாடசாலை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அதே இடத்தில் இயங்க இருப்பதனால் இப்பாடசாலையின் சகல ஆசிரியர்களினதும் தற்காலிக இணைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளன என்று அதிபர் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் பாடசாலைக்குச சமுகமளித்து கடமையேற்குமாறும் மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறும் அதிபர் க.மங்களேஸ்வரன் கேட்டுள்ளார். (க)



**பட்டினிக்கு எதிரான நிறவனம் வடமராட்சி கிழக்கு, பளை பிரதேசங்களின் கடற்றொழிலாளர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா பெறுமதியான வலை உபகரணங்களை இலவசமாக வழங்கியது.**

**இவ்வைபவத்தில் பளை உதவி அரசாங்க அதிபர் புத்திரசிகாமணி கடற்றொழிலாளர் ஒருவருக்கு வலை உபகரணங்களை கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர், நிர்வாக உத்தியோகத்தர் சர்வானந்தா, கடற்றொழில் பரிசோதகர் சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் காணப்படுகின்றனர்.**

**(படம்:வடமராட்சிச் செய்தியாளர்)**

# வாழைகளைக் கருவறுக்கும் நீள்மூஞ்சி வண்டுகளின் தாக்கம்

நீள்மூஞ்சி வண்டுகள் வாழைப் பயிருக்கு அதிகளவில் சேதம் விளைவிக்கும் பூச்சிகளாகும். வாழைக் கிழங்குகளுக்குச் சேதம் விளைவிப்பவை வாழைக்கிழங்கு வண்டு அல்லது வேர் வண்டு எனவும், வாழைத்தண்டு (போலித்தண்டு)களுக்குச் சேதம் விளைவிப்பவை தண்டு வண்டு எனவும் அழைக்கப்படும்.

**கிழங்கு வண்டு:-** 10-14 மில்லி மீற்றர் நீளமான, கறுப்பு நிற உடலைக் கொண்டது.

**தண்டு வண்டு:-** 18 மில்லி மீற்றர் நீளமான, மினுங்கும் கறுப்பு அல்லது சிவப்பு நிற உடலைக் கொண்டது.

### வாழ்க்கை வட்டம்

கிழங்கு, வண்டு, தண்டு வண்டு ஆகியவற்றின் வாழ்க்கை வட்டம் 25 நாள்களாகும். இனத்திற்கேற்ப முதிர்ந்த வண்டுகள் கிழங்த அல்லது தண்டில் முட்டையிடும். முட்டையிலிருந்து வெளிவரும் குடம்பி கிழங்கு அல்லது தண்டைத் துளைத்து அதன் பாகங்களை உண்ணும். குடம்பி, கூட்டுப்புழுவாகி, பின்பு நிறையுடலி (வண்டு) தோன்றுகின்றது. வாழ்க்கை வட்டத்தின் சகல பருவங்களையும் கிழங்கினுள்ளே அல்லது தண்டினுள்ளே கழிக்கும். இரு, வகையான வண்டுகளிலும் நிறையுடலிகள் 2 வருடங்கள் வரை வாழக்கூடியன. வளர்ச்சியடைந்த கிழங்கு வண்டுகள் பறக்க முடியாதவை. ஆனால் வளர்ச்சியடைந்த தண்டு வண்டுகள் பறக்கக் கூடியன.

### தாக்கத்தை அடையாளம் காணல்

இப்பீடைகளின் தாக்கத்திற்குள்ளான வாழை மரம், காற்று மெதுவாக வீசும் போதுகூட முறிந்து விழும். மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும். குலையின் அளவு சிறியதாய் இருக்கும்.

### கிழங்கு வண்டின் தாக்கம்

இப்பீடையினால் ஏற்பட்ட தாக்கத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு கிழங்குகளை வெட்டிப் பார்க்க வேண்டும். கிழங்குகளை வெட்டிப் பார்க்கும் போது அவற்றில் குடம்பிகளால் உண்ணப்பட்ட சுரங்கங்களை அவதானிக்கலாம். ஆனால் வாழைக குலை அறுவடை செய்யப்பட்ட மரங்களிலேயே இதனைச் செய்யமுடியும். அல்லது வாழையின் அடியை நன்றாக அவதானித்துப் பார்க்கும்போது அவற்றின் அருகே வளர்ச்சியடைந்த வண்டுகள் காணப்படுவதை அவதானிக்கமுடியும். கிழங்கு வண்டினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும்; இலைகள் படிப்படியாக மஞ்சள் நிறமாக மாறும்.

### தண்டு வண்டின் தாக்கம்

வாழைத்தண்டு வண்டுகளால் பாதிக்கப்பட்ட மரங்களின் இலைகள் மஞ்சள் நிறமாகி உலரும். தண்டு வண்டுகளால் பாதிக்கப்பட்ட போலித் தண்டுகளை நன்றாக அவதானிக்கும்போது அடிப்புறத்தில் துளைகளை அவதானிக்கமுடியும். சிலவேளைகளில் இத்துளைகளினூடாக நீர் வடிய இடமுண்டு. அதிகளவில் பாதிக்கப்பட்ட மரம் முறிந்து விழக்கூடும். அதேபோல் வாழைப் பொத்திகள் வெளிவராமல் தடைப்படுவதற்கும் இது ஒரு காரணமாக அமையலாம்.

### தாக்கத்தை கட்டுப்படுத்தல்

1. ஆரோக்கியமான குட்டிகளை மாத்திரம் நடுவதற்குத் தெரிவுசெய்ய வேண்டும்.

2. வாழைத் தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

3. வாழை மரத்தைச் சுற்றியும், வாழை மர வரிசைகளுக்கிடையேயும் காணப்படும் களைகளை அகற்றவும்.

4. வாழைக்குலையை வெட்டியபின் அம்மரத்தை நிலமட்டத்தில் வெட்டி, தோட்டத்திலிருந்து அகற்றவும். வண்டின் தாக்கம் காணப்படும் போது இதனைக் கட்டாயமாகச் செய்யவேண்டும்.

**ச.சின்னத்துரை**
**உதவி விவசாயப் பணிப்பாளர்**
*(விரிவாக்கம்)*

5. இல்லாவிடில் வெட்டிய மரத்தை இரண்டாகப் பிளந்து இதனை மீண்டும் சிறிய துண்டுகளாக வெட்டி தோட்டத்தில் பரவிவிடவும். இதனால் இவை உலர்ந்தபின் பத்திரக் கலவையாகவும் தொழிற்படும்.

6. தண்டை 2 அடி நீளமான துண்டுகளாக்கி, இரண்டாகப் பிளந்து அல்லது சிறிய துண்டுகளாக வெட்டி தோட்டத்தில் பல இடங்களிலும் பரவி விடவும். இரண்டாகப் பிளக்கப்பட்ட துண்டுகளாக இருப்பின் பிளக்கப்பட்ட பகுதி நிலத்தைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். இவ்வாறு இடப்பட்ட துண்டுகளினால் வாழை நீள்மூஞ்சி வண்டுகள் கவரப்படும் இவ்வண்டுகளை வாழைத் துண்டங்களுடன் காலத்துக்குக் காலம் தோட்டத்திலிருந்து அகற்றவும்.


7. *பொறிகளைப் பயன்படுத்தல்:-* வாழைத்தண்டுகளை 6-10 சதம மீற்றர் தடிப்புடைய சிறிய துண்டுகளாக வெட்டவும். ஒரு துண்டின் மேல் 6 கிராம் காபோபியூரான் தூளைப் பரவிவிடவும். இதன்மேல் மற்றைய துண்டை வைத்து மூடவும். இதனால் இப்பீடையைக் கட்டுப்படுத்தும் பொறியாகப் பயன்படுத்தலாம்.

இரண்டு வாழைத் துண்டுகளுக்கிடையே சிறிய கற்கள் சிலவற்றை வைக்கவும். இதனால் பொறியினுள்ளே வண்டுகள் இலகுவாகச் செல்ல வழியேற்படும்.

ஏக்கரொன்றில் இவ்வாறான 25 பொறிகளை வெவ்வேறு இடங்களில் வைக்கவும். பொறியினால் கவரப்படும் பீடைகள் அதில் காணப்படும் இரசாயனத்தினால் அழிக்கப்படும் இரு கிழமைகளுக்கொரு தடவை பொறியைப் புதுப்பிக்க வேண்டும்.

8. *வாழைக் குட்டிகளைப் பரிகரித்தல்:-*

வாழைக்குட்டிகளை நடுவதற்கு முன்பு கிழங்குகளை நன்கு சுத்தம் செய்யவும். இதற்கு பச்சைச் சாணம், சாம்பல் என்பவற்றை நீரில் கலந்து பாகு போன்ற தடித்த கரைசலாகத் தயாரிக்கவும். இக்கரைசலில் ஒரு கலனிற்கு 6 கிறாம் காபோபியூரான் வீதம் கலக்கவும். வாழைக்குட்டிகளின் கிழங்கை இக்கரைசலில் 5-10 நிமிடங்கள் வரை அமிழ்த்தவும். பின்பு இதனை ஒருகிழமை வரை நிழலான இடத்தில் வைத்திருந்து பின்னர் நடவும். ☆




## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# வல்லை மண்ணின் பெருமையை மக்கள் பேணிக்காக்க வேண்டும்

## மாணவர் கௌரவிப்பு விழாவில் உரை

வடமராட்சி,ஜன.4

வல்வெட்டித்துறை வீரம் பொருந்திய தனித்துவம் வாய்ந்த இடமாகும். இம் மண்ணின் சிறப்பம்சங்கள் எதிர்காலத்திலும் வளர்ச்சிபெறவேண்டும். அதற்காக வல்வெட்டித்துறை மக்கள தொடர்ந்து உழைக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கூறினார்.

வல்வெட்டித்துறைமக்கள், மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடத்திய 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவில வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது எதிர்காலச் சந்ததியினரை கல்வி அறிவால் மேம்படுத்தி, நாட்டுக்கு நல்ல பிரஜைகளாக அவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோருக்கும் உண்டு. தனித்துவச் சிறப்பைக் கொண்ட வல்வை மக்கள வீரத்துடன் கல்வியிலும் மிகுந்த அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள். கல்வி வீரத்துடன் கூடிய தனிச் சிறப்பம்சங்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். - என்றார்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி கவிஞர் மு.திருநாவுக்கரசு பேசுகையில்-

தமிழ் மக்களின் அழியாச் சொத்து கல்விதான். எமது மாணவர்களை கல்வியில் உயர்த்துவதில் அனைவரும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். மாணவர்களை கௌரவிக்கும் இது போன்ற விழாக்கள் இடம பெறவேண்டும். இது மாணவர்களை உற்சாகப்படுத்தும் - என்றார்.

விழா ஆரம்பத்தில் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கான 24 மணி நேர நன்னீர் வழங்கும் திட்டத்தை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக இணைப் பதிகாரி திருமதி மோஹன் மொறிஸ் ஆரம்பித்து வைத்தார். இங்கு வாகன பாதுகாப்பு நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து வைத்தியசாலையிலிருந்து 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வல்வெட்டித துறையைச் சேர்ந்த 12மாணவர்களும் மாலை அணிவிககப்பட்டு மேளதாளத்துடன் விழாவுக்குத் தலைமை வகித்த வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் பாடசாலை வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

விழாவில் வடமராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா, பருத்தித்துறை பிரதேச செயலர், ஆ. சிவசுவாமி, பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளை முகாமையாளர் எம். பரமானந்தன் ஆகியோரும உரையாற்றினார்கள்.

(க-173)

---

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வண்ணாங்கேணி, பனையைச் சேர்ந்த கணபதி கமலராணியின் தேசிய அடையாள அட்டையும் (இல.668641822V), விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (96597)

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவாகரன் இராசபூபதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 648182791V), விசேட அடையாள அட்டை (இல.091003756) என்பன ஆனைக்கோட்டைச் சந்திக்கும் குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆனைக்கோட்டை, கூழாவடி உபதபால் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். அல்லது 2610 தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96621)

கைதடி கிழக்கைச் சேர்ந்த கார்த்திகா விநாயகமூர்த்தியின் விசேட அடையாள அட்டை (இல.091020768) வதிரிச்சந்திக்கும் உடுப்பிட்டிச் சந்திககும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தர்கள் தயவுசெய்து L.S.ஜெகநாதன் (நாதஸ்வரம்), உடுப்பிட்டி என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். (96622)

காரைநகரைச் சேர்ந்த கந்தையா ஐயாள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 326181021V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நீதிவான் முகாம், சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (96632)

அன்பளிப்பு மோதிரம் (சிவப்பு, நீலம் எனாமல்) ஒன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 01.01.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரவி ஐயா வேலைக்கைப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (96630)

### விற்பனைக்கு

HONDA - 90 -21விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.இராமலிங்கம், 32/11, சங்கிலியன் வீதி, நல்லூர். (96631)

### ஆங்கில வகுப்புக்கள்

Gr. 10 English Literature புதியபிரிவு ஆரம்பமாகிவிட்டது. Gr. 9 English Literature ஆரம்பம்: 04.01.2002. G.C.E. A/L 2004 Batch General English ஆரம்பம்: 05.01.2002 (அனுமதிக்கு பெற்றோர் வருகை மிகஅவசியம்). Literature வகுப்புகளுக்கு மொழித் தகைமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். தொடர்பு K.சுப்பிரமணியம், பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (96365)

**BRIGHTMAN**
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
BY: லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்:
05.01.2002 SAT. - 4.00 (96623)
A/L 2004 வெகுவிரைவில்

**A/L 2004**
பௌதிகவியல் வகுப்பு
ஆரம்பம்:
06-01-2002 ஞாயிறு காலை 10 மணி
யோகானந்தா,
49, இராஜ வீதி,
கல்வியங்காடு, நல்லூர். (96617)

**கணக்கீடு**
A/L 2003
பங்குடமை
ஆரம்பம்:- 05.01.2002
காலை 7.30 - 8.30
(சனி, ஞாயிறு மட்டும்)
ஆசிரியர்: வின்சன்ட்
B.BA.. (FRM.SPL.)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தறிக்கப்பட்ட வேம்பு, மா, மலை வேம்பு, தேக்கு மரங்களின் அடிப்பாகங்களும் கிளைகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நாள்: 10.01.2002 வியாழக்கிழமை.
நேரம்: முற்பகல் 10.30 மணி.
இடம்: யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகம்.

ஏலவிற்பனைக்குரிய மரங்களைப் பார்வையிட விரும்புவோர் 08, 09ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் உதவிநிதியாளர் வழங்கலுடன் தொடர்புகொண்டு பார்வையிடமுடியும்.

ஏலத்தில் வெற்றிபெறுபவர் அதற்கான முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும். மரங்களை அன்றைய தினமே எடுத்துச்செல்லலாம். காலஅவகாசம் தேவைப்படின் உதவ நிதியாளர் வழங்கலுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
(C/19093) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

---

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (I)
மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

மண நீக்கம் / 85

பேதுறு அந்தோனி
மாதகல் - தற்போது
நவபுரம் - கைதடி.
- வழக்காளி

அந்தோனி பெண் ஆனந்தம்
செபஸ்தியார் கோயிலடி,
மாதகல்.
- எதிராளி

மேலே பெயர் குறித்த எதிராளிக்கு -

மேற்படி நீதிமன்றில் உமக்கெதிரான விவாகரத்து வழக்கு தாக்கலாகியுள்ளது. உமக்கு மறுமொழி ஏதேனும் இருப்பின் 14.12.2002 ஆம் நாளன்றோ அதன் முன்னரோ உமது மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் மறுகட்சிக்காரர் இன்றி வழக்கு விளங்கப்படும் என இத்தால் அறிந்துகொள்ள கேட்கப்படுகின்றீர். பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் தோன்றாவிடில், சகல அறிவித்தல்களையும் சேர்ப்பிக்கக்கூடிய முகவரியை கோப்பிடுமாறு நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

மு.சபாநாதன்
(வழக்காளியின் சட்டத்தரணி)
வரைவு

பதிவாளர்
மாவட்ட நீதிமன்று,
(C-19092) மல்லாகம்.

---

## கண்ணீர் அஞ்சலி


எமது கல்வி நிறுவன முன்னாள்
பிரபல இரசாயனவியல் ஆசிரியர்
**ஆ.மகாதேவன்** அவர்கள்
காலமானதையிட்டு துயர் அடைவதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

BEACON கல்விச் சமூகம்,
(96619) வதிரி, கரவெட்டி.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1924 - 09 - 05



உதிர்வு 2000 - 12 - 16

அமரர்
**ஐயம்பிள்ளை சின்னக்குட்டி**

ஆண்டுகள் பல சென்றாலும் மாறாது எங்கள் துயரம்!
அன்போடு பண்பு கொண்டு அரவணைத்து
அறிவூட்டி ஆதரித்து வளர்த்து அணைந்த குலவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
தும்பளை,
பருத்தித்துறை. (C20071) பிள்ளைகள், பேரப்பிள்ளை.

---

**எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை**

மட்டுப்படுத்தப்பட்ட, எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம் 05-01-2002
1 மணி (புதிய நேரம்)
ஆசிரியர்: அ.குமாரவேல்
புதிய உயர் கல்லூரி
(96581) ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

---

## இதய அஞ்சலி

மக்கள் வங்கியில் தன்னை இணைத்துக்கொண்டு, மக்களுக்கு மகத்தான சேவையாற்றிவரும் வேளையில் இறைபதம் எய்திய
**பொ.கணேசலிங்கம்** - அவர்கள்
*(முகாமையாளர், பருத்தித்துறை கிளை நிடித்தகருமபீடம்)*
காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

*இலங்கை வங்கி ஊழியர் சங்கம்,*
*மக்கள் வங்கி பிரிவு,*
*யாழ்ப்பாணம் - கொழும்பு.* (96628)

பொதுச்சபை உறுப்பினர்கள்,
வடபிரதேச ஊழியர் நலன்புரி
உத்தியோகத்தர் மற்றும்
அங்கத்தவர்கள்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ச.நரேந்திரன அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி மாணிக்கம் சிவசுப்பிரமணியம்**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஆளணியினர்,
(96626) யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

---

## நீங்காத நினைவில் 8ஆம் ஆண்டு

மண்ணில் 1968 - 08 - 26



விண்ணில் 1994 - 01 - 03

**செல்வன் இராஜதுரை இராஜேஸ்வரன்**
திதி: 2002.01.04

கண்ணில் எட்டாண்டு கரைந்து மறைந்ததுவே!
கண்மணியே நீயில்லை எமக்கொரு உறவாட
எண்ணாத நாளில்லை இரங்காத பொழுதில்லை
உன்னுடைய நினைவுகளே எமை இங்கு ஆளுமையா....

உன் பிரிவினால் வாடும்:
*நாவற்காடு, அச்சுவேலி.* (C.....) குடும்பத்தினர்.

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
### சேமிப்புமீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தில் 2000 - 2001 நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் சங்கத்திலும், கிராமிய வங்கியிலும் வைப்புக்களை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் 07-01-2002ஆம் திகதி தொடக்கம் 11.01.2002ஆம் திகதிவரை உங்களின் சேமிப்புப் புத்தகங்களில் 31.05.2001ஆம் திகதி உள்ள மீதிகளை மேற்படி சங்கக் காரியாலயத்தில் உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி சி.நல்லதம்பி,
*கணக்காய்வாளர்,*
*கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்.*

(C/19097)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை நடன ஆசிரியை
**திருமதி ராதிகா சுதாகரன்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நாகேஸ்வரி இரகுராசகுமாரன்**
அவர்கள் இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
*யா/கனகரட்ணம் ம.ம.வித்தியாலயம்.*

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 09 - 1946



உதிர்வு 28 - 12 - 1999

அமரர்
### புவிராஜரட்ணம் திருஞானசம்பந்தன்
திதி: 04.01.2002

"எம் வாழ்வு வசந்தம் வீச
எங்களுக்காய் வாழ்ந்த எங்கள் அப்பாவே!
போட்டு வாரேன் என்று சொல்லிப் போனீரே...
இரண்டு ஆண்டுகளும் போய்விட்டது, இன்னும் வீடு
வந்துசேரவில்லை. வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை
வாழ்ந்த உம் ஞாபகங்கள். அப்பா என்றழைக்க
நீர் வரமாட்டீரோ? வந்து ஆறுதல்தான் கூற
மாட்டீரோ? சிறகொடிந்த இந்தக் கூட்டுக்
குயில்களுக்கு அடைக்கலம் இனி யார்தானோ?"

*உங்கள் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்:*

*பொன்னாவில்லா,*
*இமையாணன், உடுப்பிட்டி.* (96634) - குடும்பத்தினர்.

## திருத்தம்

நேற்றைய உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான "நாரந்தனை தாக்குதல் சம்பவம்; குடாநாட்டிலிருந்து வெளியேறியோர் விவரங்களைப் பரிசீலிக்க உத்தரவு" என்ற தலைப்பில் வெளியான செய்தியின், தலையங்கத்தில் 'வெளியேறியோர்' என்பது 'வெறியேறியோர்' எனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி - 2001/2002**

இந்துவருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9(தரம்8) கல்வித்தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன/தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான "தொழிலாளர் கல்விச் சான்றிதழ்" கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*தெரிவு:- எழுத்துப் பரீட்சையும் நேர்முகத் தேர்வும்*

குறிப்பு:- 10 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2001/2002**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்தவர்கள் மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

காலம்:- ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்)

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் 20/- செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/-இற்கான காசுக் கட்டளை / தபாற்கட்டளையுடன் சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23செ.மீ. X10செ.மீ. அளவினதான கடித மேலுறையுடன் "உதவிப்பதிவாளர் /தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி: 31-01-2002.

பதிவாளர். 02-01-2002

(C/19096)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### இராசையா கந்தசாமி
(உரிமையாளர் -
கீதா ஆபரணமாளிகை, சாவகச்சேரி)

மலர்வு 1949-05-23 உதிர்வு 1992-01-10

திதி: 04-01-2002

சிறப்பிழந்தோம் இல்லத்தில் நீங்கள் சென்ற நாளிலிருந்து
நம் துயர் துடைக்க இனி ஒரு பிறவி எடுக்கமாட்டீர்களா?
சிறகொடிந்த பறவைகளாய் சேர்ந்து துடிக்கின்றோம்
உறவிழந்து உணர்விழந்து ஊமைகளாய்த் தவிக்கின்றோம்.
அன்பின் சிகரமாய் நெஞ்சத்து சுடர்விளக்காய்
வாழ்ந்து மறைந்திடினும் காலமெல்லாம் உங்கள்
நினைவில் வாழ்ந்திடுவோம் - அப்பா!

*உங்கள்*
*பிரிவால் வாடும்:*
குடும்பத்தினர்.

*நிரந்தர முகவரி:*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

*தற்காலிக முகவரி:*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(96648)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தர்மதா காமேசன்

துன்னாலை, தாமரைக் குளத்தடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி தர்மதா காமேசன் 02.01.2002 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை காமேசன் (விரிவுரையாளர், வவுனியா விவசாயக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், வாஷினியின் அருமைத்தாயாரும், வைத்திலிங்கம் கனகசபாபதி (இளைப்பாறிய ஆசிரியர், கந்தர்மடம்), காலஞ்சென்ற திருமதி இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி (இளைப்பாறிய ஆசிரியை, துன்னாலை) ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் கணபதிப்பிள்ளை, திருமதி கணபதிப்பிள்ளை, திருஞானபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும், ஸ்ரீசுதர்சன் (பொறியியலாளர்,ஆஸ்திரேலியா), குமணன் (பொறியியலாளர்,ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சசீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், மனோகரன் (கனடா), ஸ்ரீதரன் (கனடா), கெளரி (அமெரிக்கா), ஜெயகெளரி (ஜேர்மனி), கலா (ஆஸ்திரேலியா), உமா (ஆஸ்திரேலியா), நளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொறல்ல ஜயரட்ணா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கனத்தை பொதுமயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றோம்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,* தகவல்:-
*உரும்பிராய்.* (96639) பேராசிரியர் வ.ஆறுமுகம் *(மாமன்)*

## மரிசலின் ஞானப்பிரகாசம்
*(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ற்)*

இளவாலையைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி, 34ஆம் இலக்கத்தில் வசித்து வந்த மரிசலின் ஞானப்பிரகாசம் நேற்றுமுன்தினம் (02.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரிசலின் - மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், பிரான்சிஸ்காவின் (முத்தம்மா - ஓய்வுபெற்ற அதிபர், நாரந்தனை றோ.க.பெண்கள் பாடசாலை) அன்புக்கணவரும், றெஜினோல்ட் இம்மானுவேல், மேரி மொனரீசா (தேவி - ஓய்வுபெற்ற ஆசிரியை, லண்டன்), ஜசிந்தா (ரூபா), லெல்லி றேமன்ட் (லண்டன்), றாஜினி (ஜெம்மா), செல்வநாதன் (U.S.A.) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நேசம்மா மற்றும் திரேசம்மா (லண்டன்), அன்னம்மா, எலிசம்மா, ஸ்ரெலா (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை), காலஞ்சென்ற சவுரிமுத்து, அருமை மற்றும் செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் S.A.நீக்கிலஸ் (நாரந்தனை புனித இராயப்பா ஆலய நிர்வாகசபை அங்கத்தவர்), காலஞ்சென்ற ஜேக்கப் சின்னத்தம்பி (அல்லைப்பிட்டி) மற்றும் றெபேக்கா (இராசம்மா), காலஞ்சென்ற யோசப் (அதிபர், நெரிஞ்சிமுனை அரசினர் பாடசாலை), காலஞ்சென்ற மேரி யோசப் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜோதிராஜன் (லண்டன்), ரவீந்திரன், இந்திரன், நல்லையா, பிறின்சி, பேணி (லண்டன்), அன்ரனற் (U.S.A.) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ், டினேஸ், றொஜஸ், சிந்துஜா (லண்டன்), ஷொகான் (லண்டன்), ஷர்மிலா (கனடா), சுவின்ரலா (லண்டன்), அஜித், சஜித், ஹவின் (லண்டன்), ஷாமினி (லண்டன்), எலிசா (லண்டன்), லக்ஷ, ஷிவாந்தி, றொசான், நிலாந்தி, ஷாமந்தி, அன்ரன் (U.S.A.) ஆகியோரின் அன்புப் பேரனும், ஹர்சாவின் (கனடா) அன்புப் பூட்டனும், அருட்தந்தை கலாநிதி சந்திரகாந்தனின் (கனடா) தாய்மாமனாரும், பீற்றர் இம்மானுவேலின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை மத்திய வங்கி) பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*34,கோயில் வீதி,* தகவல்:-
*யாழ்ப்பாணம்.* பிரான்சிஸ்கா ஞானப்பிரகாசம் *(மனைவி)*
(96650) இராஜினி *(ஜெம்மா மகள்)*

## திருமதி பொன்னம்மா அமிர்தநாதர் *(சுபாட்தி)*

சூராவத்தையைச் சேர்ந்த பொன்னம்மா அமிர்தநாதர் (இளைப்பாறிய ஆசிரியை, நல்லாயன் கன்னியர்மடம், கொட்டாஞ்சேனை) 01.01.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் அமிர்தநாதனின் மனைவியும், றோகினி (ஈஸ்வரன் பிறதர்ஸ்), அருட்சகோதரி றஜனி (திருக்குடும்ப சபை), றஞ்சனி (கனடா), றோகான் (எக்செல் வாஸ்ட்), மாலினி (மக்கள் வங்கி, யோகவந்தலாவை) ஆகியோரின் தாயும், ஜோசப் (சிலோன் டீ பிளான்ரேசன் எக்ஸ்போட்ஸ்), மேகநாதன் (கனடா), குயின்சிலின், மனோகரன் (மக்கள் வங்கி - ஹட்டன்) ஆகியோரின் மாமியும், மயூரி (பிறிஜட்ஸ் கன்னியர்மடம்), மீரா, பிரவீனா, அபிஷேக், ஹஷ்வீனா, கவிந்த், தனூஸ் ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்ற அருட்சகோதரிகள் அப்பலோனியா, டொலறொஸ் மற்றும் அருட்சகோதரி கொன்ஸ்ரன்ஸ் (திருக்குடும்ப சபை), நவமணி, கார்த்திகேசு, பாக்கியரத்தினம், மனோன்மணி, திரேசா, ராஜரட்ணம், தேவதாசன், தங்கராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.01.2002) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*1/43-57, பாம்றோட்,* தகவல்:-
*மட்டக்குளி.* (96637) S.A.தேவதாசன் *(சகோதரன்)*

## ஆறுமுகம் மகாதேவன் (மகாதேவா)
*(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை;*
*முன்னாள் பிரபல இரசாயனவியல் ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)*

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகாதேவன் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை; யாழ். இந்துக் கல்லூரி பிரபல இரசாயனவியல் ஆசிரியர்) நேற்றுமுன்தினம் (02.01.2002) புதன்கிழமை இறையடிசேர்ந்தார்.

அன்னார் மங்களராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அருமைக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பூரணம் தம்பதியினரின் அருமை மகனும், வாமதேவன், சக்திதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணரத்தினம், அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், சுகிர்தேஸ்வரி, இராசநாயகி, மங்களவதனி ஆகியோரின் மைத்துனரும், உதயகுமாரின் சகலனும், ஞானபரம், வாகினி, வாசுகி ஆகியோரின் சித்தப்பாவும், ராகுலன், கிருஷாந்தி, நிஷாந்தி, சிவரூபன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் பொறளை ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (4.1.2002) வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரையும் நாளை (5.1.2002) சனிக்கிழமை காலை 8 மணி முதலும் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு சனிக்கிழமை மாலை 3 மணியளவில் இறுதிக கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*49, குவாரி வீதி, தெஹிவளை.* *தகவல்:-*
*தொ.பே. 075 - 532678.* (C/19099) ஆ.வாமதேவன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 07 - 1929



மறைவு 05 - 12 - 2001

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ் ஆசான்
உயர்திரு. சிவலிங்கத்தின் அன்புத் தந்தை

### அமரர் சின்னத்தம்பி சிவபுண்ணியம்

சீரோடு தோன்றிப் பண்புடன் வாழ்ந்து
பல விருட்சங்களை உருவாக்கிய
பெருந்தகையே!
நீங்கள் வேராகி நின்று உருவாக்கிய பெரு விருட்சத்தின்
விழுதுகள் நாம், தவிக்கின்றோம் உம்மைக் காணாமல்.
சிவனடியில் என்றும் சிரஞ்சீவியாய் வாழப்
பிரார்த்திக்கின்றோம்.

- 97, 98, 99ஆம் ஆண்டு
பல்கலைக்கழக
அனுமதிபெற்ற கலைப்பிட மாணவர்கள்.

(96661)

## கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம் 19 ☆ 08 ☆ 1947



மறைவு 02 ☆ 01 ☆ 2002

### ஆறுமுகம் மகாதேவன்

(இரசாயனவியல் ஆசான்)
*(B.Sc. - Dip. in Education S.L.E.A.S.)*

1982இல் ஆசிரியப் பணியில் அடியெடுத்து வைத்து பல கல்லூரிகளிற் காலூன்றி - குறிப்பாக யா/யூனியன் கல்லூரி, கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, யா/இந்துக் கல்லூரி ஆகியவற்றிற் பணிபுரிந்து எண்ணிறைந்த பொறியியலாளர்கள், வைத்தியர்கள், விஞ்ஞானப் பட்டதாரிகளின் விளைச்சலுக்கு வித்தானாய். யா/பலாலி ஆசிரியர் கலாசாலை, யா/கல்விக் கல்லூரி தந்த பல நல்லாசிரியர்களின் நன்னிலமும் நீயே. சேவையில் 30 அகவை காணும் இவ்வேளை முப்புரம் எரித்தோன் மலரடி நினைந்தனையோ? பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆசிரியர்களாய் எம்மை இணைத்தது. அந்த நாள் முதல் என் இனிய சுவாசமாய் என்னோடு இணைந்த ஆருயிர்த் தோழனே, நீ செல்கையிலே என்னிடம் சொல்ல மறந்ததேன்? உன் இனிய ஆத்மா இறைவனோடு இணைந்து அமைதி பெற வேண்டுகிறேன்.

வி.சச்சிதானந்தன்,
*அதிபர்,யா/நடேஸ்வரக் கல்லூரி.*

(96647)

## கண்ணீர் அஞ்சலி

*பாரிஸ் நகரில் காலமான பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட*
திருமதி றேமன் ராணி,
*லண்டன் நகரில் காலமான*
*பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட*
திருமதி குயின்ரிலன் பொன்கிளி
ஆகியோரது மறைவையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(96644) தண்டபோல் குழு, பாசையூர்.

## விழிநீர் சொரிகிறோம்

### வழியொன்றைத் தேடி....



*இரசாயனவியல் பேராசான்*

### ஆ.மகாதேவன்

(B.Sc. - Dip. in Edu., S.L.E.A.S.)

யாழ். இந்து கண்ட கல்வித் தீபம் - இன்று
காலத்தின் பெருமூச்சால் அணைந்ததையா!
கல்வியிலே முத்தெடுத்து கரைகண்ட
காவியனே உம் மறைவால்
கற்றவர் நாம் ஏங்குகின்றோம் - மீண்டும்
உம்மிடம் கல்வி கற்க.....
*அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.*

(96655) யாழ். இந்து 2003 A/L மாணவர்கள்.

## டக்ளஸ் அனுதாபம்

கொழும்பு,ஜன.4

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் காமினி அத்துக்கோரளை அகாலவேளையில் உயிரிழந்த செய்தி மிகவும் அதிர்ச்சி தருவதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்த காமினி அத்துக்கோரளை, எதிர்காலம் குறித்து புதிய நம்பிக்கைகளும் புதிய எதிர்பார்ப்புகளும் மலர்ந்துள்ள இத்தருணத்தில் எவரும் எதிர்பார்க்காதவகையில் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவரான அன்னார் இனங்களுக்கு இடையிலான ஐக்கியம், புரிந்துணர்வு என்பன வளர வேண்டும் என்பதில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தவர். அன்னாரது மறைவினால் துயரப்படும் ஒவ்வொருவரினதும் சோகத்திலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பங்கு கொள்கிறது. ஈ.பி.டி.பியின் சார்பிலும், தமிழ் பேசும் மக்களின் சார்பிலும் மறைந்த காமினி அத்துக்கோரளையின் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்த கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 207 தபால் பொதிகள் இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம்,ஜன.4

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இன்று வந்துசேரவுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 207 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் இன்று காலை வரை சேகரிக்கப்படும் தபால்கள் அனைத்தும் பொதி செய்யப்பட்டு, திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## தவறவிட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.போதனா வைத்தியசாலை வளவுக்குள் தவறவிடப்பட்ட 4 அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டைகளில் உள்ள பெயர் விவரங்களும் இலக்கமும் வருமாறு:-

- ★ கந்தையா மகாலிங்கம் - 091010627
- ★ செல்வகுமார் சசிகலா - 725611560V
- ★ சதாநந்தசிவம் சிவசாந்தினி - 785183720V
- ★ இராமலிங்கம் குணரத்தினம் - 0905008092.

சம்பந்தப்பட்டவர்கள் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தமது அடையாள அட்டைகளை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளமுடியும் என்று வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-6)


அறிவொளி - NALLUR
**A/L 2004**
வகுப்புகள்
ஆரம்பம்: 05.01.2002
4.30 p.m.

| | |
|---|---|
| C.Maths | : B.ரவீந்திரன் B.Sc. |
| Physics | : M.ஸ்பெல்மன் |
| Chemistry | : B.விஜயன் B.Sc. |
| Bio. | : T.ஜெயசீலன் B.Sc. |

நேரகுசியை பெறுக. (96654)

N.C.A.கல்வி நிறுவனம்
பருத்தித்துறையில்
23 ஆண்டு கால சேவையில்
புதிய வகுப்பு ஆரம்பம்.
09.01.2002 பி.ப.3மணி
A/L 2004 (கலை, வர்த்தகம்)

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. அன்ரனி |
| அளவையியல் | - திரு. பிரபானந்தன் |
| கணக்கியல் | - திரு. பார்த்தீபன் |
| வர்த்தகம் | - திரு. உதயயோகன் |
| தமிழ் | - திரு. அமரசிவம் |
| இ. சமயம், இ. நாகரிகம் | திரு. இராஜெஸ்கண்ணா |

(96642)


## பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி பழைய மாணவியும்,
யாழ். பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர்

### திருமதி கிருசாந்தி ரவீந்திரா

அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக மரபில் முதன்முதலாக பரதநாட்டியத் துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்று எமது பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளமையையிட்டு அவரை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் இக்கலையில் சிறப்புற இறைவன் ஆசியை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி. (96652) மாணவர்கள்.


## புதிய வகுப்புகள் ஆரம்பம்

எமது நிறுவனத்தினால் நடத்தப்படவிருக்கும் G.C.E. (O/L) 2001 மாணவர்களுக்கான JUNIOR DIPLOMA IN COMPUTER SCIENCE கற்கைநெறிக்கான வகுப்புகள் 05.01.2002 அன்று காலை 10.00 மணிக்கு எமது நெல்லியடிக் கிளையிலும் மாலை 3.00 மணிக்கு எமது யாழ்ப்பாணக் கிளையிலும் ஆரம்பமாகும். மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது சமுகம் கொடுக்கவும்.

இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொண்டு வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்.

DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY

124/2 Palaly Road, Thirunelvely, Jaffna.
N.M.M.V. Road, Nelliyadi.

(C-19100)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 - 06 - 1922



உதிர்வு 05 - 12 - 2001

### திருமதி முருகேசு தங்கம்மா

மரதம் ஒன்று ஆனதம்மா
மறக்கவில்லை உன் முகம்
திங்கள் ஒன்று சென்றதம்மா
தீரவில்லை எம் துயர்!

உங்கள் பிரிவால் துயருறும்:
*111/13 இராஜசிங்கம் வீதி,* மக்கள், மருமக்கள்,
*யாழ்ப்பாணம்.* பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(C/19049)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பாலச்சந்திரன் (சந்திரன்) அவர்கள் 03.01.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், கட்டைப்பிராயைச் சேர்ந்த தம்பிராசா - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், தர்மகுணவதியின் அன்புக் கணவரும், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களான பாலரவி (2002 வர்த்தகப் பிரிவு), தர்மா, மதிசாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுப்பிரமணியம் (கனடா), பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), திருமதி சரோஜினிதேவி மகேந்திரநாதன் (ஜேர்மனி), பாலரவீந்திரன் (கனடா), பாலநவநீதன் (இந்தியா), பாலரஞ்சன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி தயாபாரதி கந்தையா, திருமதி தயாளகுணவதி சுந்தரேஸ்வரர், சாந்தகுலநாதன், தர்மகுலநாதன் (ஜேர்மனி), குகதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னக்கோயில் தெரு,*
*கட்டைப்பிராய்,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

(96662)

# முக்கிய அறிவித்தல்

எமது கல்வி நிறுவன மூத்த இரசாயனவியல் ஆசான்

## ஆறுமுகம் மகாதேவன்

அவர்கள் இறைபதம் எய்திய செய்தியை எமது மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் மிகுந்த துயருடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 05. 01. 2002 (சனிக்கிழமை) அன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

அதுவரை அமரருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக எமது நிறுவனத்தினதும், கிளை நிறுவனத்தினதும் அனைத்துச் செயற்பாடுகளும் முற்றாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்.

NEW SCIENCE COLLEGE - NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி. - யாழ்ப்பாணம்.

(96633)

# நல்லூர் வணிகர் கழகம்

நல்லூர் வணிகர் கழகத்தின் 2002ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் 2002-01-20 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு.(புதிய நேரம்) சங்கப் பணிமனையில் நடைபெற இருப்பதால் சகல வர்த்தகர்களையும் குறித்த நேரத்திற்குத் தவறாமல் சமுகம்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு.

ம.குணபாலன்,
செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம்.

(96651)

## யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலைக் கல்வி வரலாற்றில் புதியசாதனை

யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டு பரீட்சை எழுதிய G.C.E. (A/L) 2001 மாணவர்கள் அனைவரும் சித்திபெற்று (100%) சாதனையை நிலைநாட்டியுள்ளனர். வெற்றிக்கு அயராது உழைத்த அதிபர் திரு. S.S.தங்கராஜா, ஆசிரியர்கள், மாணவர்களை மனமாரப் பாராட்டுகின்றோம்.

*தோற்றியோர்: 21*

சிறப்புப் பெறுபேறு: செல்வி S. மேரிஆன் - 2A B
செல்வன் J. டானியல் - A 2B
செல்வி S. மேரிபுவனேஸ் - A 2B

(96656) பா.அ.சங்கம்.

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

### வருமதி, சென்மதி, கடன், முற்பண மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தில் 2000 - 2001 நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் சங்கக் கொடுக்கல் வாங்கலில் தொடர்புடையவர்கள் 15-01-2002ஆம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக உங்கள் மீதியை உறுதிப்படுத்தி எனக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி சு.நல்லதம்பி,
(C/19098) கணக்காய்வாளர். கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## S.R.கதிரவேற்பிள்ளை

(பெரிய கடுக்கன் - சித்திரா லொறி உரிமையாளர்)

யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் செம்பியன் ஒழுங்கை, மாத்தனை முருகன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட S.R.கதிரவேற்பிள்ளை கனடாவில் 01.01.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா இராசையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரநாதன் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும், தங்கமணி (பிரான்ஸ்), பஞ்சாட்சரம், பாலசுந்தரம் (கொழும்பு), சிவகங்கை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரவீந்திரன் (ஹொலண்ட்), விஜேந்திரன் (பிரான்ஸ்) மற்றும் கனடாவைச் சேர்ந்த அனுஷியா, சித்திரா, குலேநதிரன், தனஜா, இந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சந்திரசோதி, சுந்தரேசன் காந்திநாதன், இரவீந்திரராணி, ஜெயந்தா, பத்மலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருஜா, நிருபிகா, லக்கியா, சாதனா, சந்தியா, ஜனா, தக்ஷா, அபிசன், கேசவி, சுரோமி ஆகியோரின் அன்புப பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2002) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1883, Roemymed Drive,
Mississauga, Ont. Canada.
T.Phone: 001-9058237582

தகவல்:
க.குலேந்திரன்
(மகன்)

(96679)

## திருமதி நீற்றா அன்று யோசவ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா அன்று யோசவ் (இளைப்பாறிய ஆசிரியை) 29.12.2001இல் கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்று யோசவ் (விசையப் பணிப்பாளர்)வின் மனைவியும் Dr. அன்ரன் (U.S.A.), அருட்தந்தை C.A.யோக்கீம்பிள்ளை (O.M.I.), இளஞ்சிங்கம் (கனடா), திருமதி கிறேஸ்மனுவல்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செங்கஸ் (U.S.A.), சைர்னஸ (கனடா), செலறீனா (கனடா), கமீலஸ் (கனடா), செலின் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 03.01.2002 கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தார் சார்பில்
J.E.இராசநாயகம்.

(96680)

### மதனராஜன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்த விவகாரம் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்த சமயம் வேலணை மற்றும் தீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் மதனராஜனும் நெப்போலியனும் எந்தவித பிரச்சினைகளுமின்றி வலம் வந்து கொண்டிருந்ததாக தீவகத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

வடபகுதி மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையான 'றாள்' அமைப்பின் சார்பில் தீவகத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கென முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டியிருந்த சில கம்பியூட்டர்களை நான்கு, ஐந்து பாடசாலைகளுக்கும் தீவக கல்வி வலயத்துக்கும் மதனராஜனும் நெப்போலியனும் நேரில் சென்று வழங்கும் திருப்பணியை அன்று முற்பகலில் மேற்கொண்டனர்.

தீவக கல்விவலய அலுவலகத்துக்கான இரண்டு கம்பியூட்டர்களில் ஒன்று முதல்நாள் ஓட்டோ மூலம் அனுப்பப்பட்டது. மற்றைய கம்பியூட்டர் நேற்றுமுன்தினம் நேரில் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கையின் முன்னேற்றம் கருதி மதனராஜன் குழுவினரின் அன்றைய தினச் செயற்பாடுகளில் ஒரு பகுதியை வெளியிடுவதும் அதனோடு சம்பந்தப்பட்டோரின் விவரங்களைத் தருவதும் அவசியமாகின்றது. அது வருமாறு:-

காலை பத்து மணியளவில் 'டெலிக்கா' வான் ஒன்றில் மதனராஜன் குழுவினர் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு வந்தனர். அங்கு கம்பியூட்டர் கையளிக்கும் வைபவத்தில் மதனராஜனுடன், வேலணைக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தவராசா, வித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதன், வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி மற்றும் வித்தியாலய ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

வேலணைப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்னர் நெப்போலியன் வந்து தனது வேலைகளை முடித்துக் கொண்டு சென்றதாகவும் -

தீவகத்தில் அவர்கள் தங்கு தடையின்றி நடமாடுவதாகவும் -

தீவகத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

(உ)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

இரண்டு பேர் கொண்ட வீட்டினை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
வயதெல்லை:- 30-45
சம்பளமும் வசதிகளும் பேசித் தீர்மானிக்கப்படும்.
52B, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (96667)

**ராஜா** யாழ்ப்பாணம்
ஷியாம், சிம்ரன், ஜோதிகா
நடித்த
**12 B**
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C/20092)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல்
கமல் (இரட்டை வேடம்), மனீஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C 20099)

**லஷ்சுமி** இணுவில்
அஜித், மம்முட்டி,
அப்பாஸ், தபு, ஐஸ்வர்யா
**கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்**
(ரீல்ஸ்)
தினசரி 10.30, 2.30
(96677)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அஜித், பார்த்திபன், தேவயானி
நடித்த
**நீ வருவாய் என**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பொன்னுத்துரை

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், விநாயகர் வீதி, நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை நேற்று (03.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - குஞ்சுப்பிள்ளையின் அன்பு மகனும், செல்வரத்தினத்தின் (இந்திரா) அன்புக் கணவரும், நகுலதாஸ், குகதாஸ், பவானி, நந்தினி, நிலாயினி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நாகரத்தினம், சாந்தகுமார், தயா (டென்மார்க்), யோகலட்சுமி (ரதி), சந்திரகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சின்னப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, பாக்கியம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
பொ.நகுலதாஸ்(தம்பி)
பொ.குகதாஸ்
} மகன்மார்

(96668)

## வேலுப்பிள்ளை சுந்தரதாஸ்

(முன்னாள் அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகக்கொண்டவரும், தற்போது கனடாவில் வசிப்பவருமான வேலுப்பிள்ளை சுந்தரதாஸ் அவர்கள் 01.01.2002 இல் அமரத்துவமடைந்துவிட்டார்.

அன்னார் ருக்குமணியின் (முன்னாள் கல்வியதிகாரி) அன்புக்கணவரும் இந்தி, திருமதி துஷி பாலமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளி, மதனன், மகிழன், அஸ்வின், அர்ச்சனா, அகல்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கைலன்ஸ் ஈம இல்லத்தில் இன்று (04.01.2002) வெள்ளிக்கிழமை வரை வைக்கப்பட்டு 05.01.2002 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இறுதிக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
*திரு R.பாலசுப்பிரமணியம்,*
*10, சிம்ஸ் றைங்,*
*அஜாக், ஒன்ராறியோ,*
*L 1 T3 J5, கனடா.*

அறிவிப்பவர்:-
திரு.அ.மு.அருணாசலம்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை,
மானிப்பாய். (96669)

## சின்னத்தம்பி காளிதாசன்

(ஓய்வு பெற்ற லிகிதர்)

சோனக தெருவைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி காளிதாசன் நேற்று (03.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் முகுந்தினி (கனடா), நகுலினி (சங்கத்தானை), வசந்தினி (டென்மார்க்), இந்திரதாசன் (டென்மார்க்), இந்துமதி (மல்லாகம்), மோகனதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கறாமி, சின்னராசா, தயாளன், விஜிதா, காலஞ்சென்ற ஜெயராசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பாபக், ஆஸ்லி, சாலி, சசிகரன், மயூரதி, திலீபன், பிரகாஷ், சாயி, மிதுரன், மேகலன், நவீனன், பாலகம்ஸன், பாலநிரோஜன், பாலதனுஷன் ஆகியோரின் பேரனும், பாலசிங்கம், மங்களம், சோதி, காலஞ்சென்ற திலகம் ஆகியோரின் சகோதரனும், பாலசுந்தரம், தியாகராஜா, விஜயரத்தினம், சீவரத்தினம், தில்லைநாதன், தர்மகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*687/28A, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:-
(96674) கா.பரமேஸ்வரி (மனைவி).

## திருமதி கந்தசாமி சின்னத்தங்கச்சி

பலாலி கிழக்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சின்னத்தங்கச்சி நேற்றுமுன்தினம் (02.01.2002) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்புத் துணைவியும் மகாராசா, மனோகரராசா (செய்தியாளர் - வலம்புரி, ஆசிரியர் - தனியார் கல்வி நிறுவனங்கள்), மனோரஞ்சிதராணி, மனோரஞ்சிதராசா, விஜயராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் ராதா, நிருஷா ஆகியோரின் அன்பு மாமியும் பொன்னு, செல்லத்துரை, இரத்தினசிங்கம், நல்லதம்பி, கமலாதேவி ஆகியோரின் அன்புச சகோதரியும், பொன்னுத்துரை, பரமேஸ்வரி, முத்துத்தம்பி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (02.01.2002) அவரது இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் அச்சுவேலி சீத்தாங்குளம் மயானத்தில் மாலை 4.30 மணியளவில் தீயில் சங்கமமானது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (C/19021)

தகவல்:
க.மகாராசா, க.மனோகரராசா
(மகன்மார்)

## சின்னத்தம்பி தனபாலசிங்கம் (பெரியம்பி)

(உரிமையாளர் - ஞானவைரவர் லொறி 42-1032)

சங்கானை வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தனபாலசிங்கம் 29.12.2001 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி மற்றும் அமரர் மகேஸ்வரியின் அன்புப் புதல்வனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும், தினேஸ் (பழைய மாணவன், யா/பரியோவான் கல்லூரி), துசிதா (யா/திருக்குடும்ப கன்னியர்மடம் - தரம்-11), திலக்சி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - தரம்-4) ஆகியோரின் அன்புத் தந்தையும் பூரணத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற கந்தையா (வரணி) மற்றும் சின்னப்பிள்ளையின் மருமகனும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி, சாந்தனாதேவி, சாரதாதேவி, கமலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜா (மாயவன் லொறி), பவனேந்திரராஜா, செல்வரட்ணம் (சாரதா லொறி), மங்களேஸ்வரி (ஜேர்மனி), புவனேஸ்வரி (கொழும்பு), புஸ்வமணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பரராஜசிங்கம் (பொலீஸ்), சிவயோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற சசிகுமார், தர்சனா, றஜீவ்குமார், கயன்நாத், நாவண்ணன், சஞ்ஜீவ், சஞ்சீகா, சிரஞ்சீவ், சங்கீத், நிருபா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.01.2002)வெள்ளிக்கிழமை 3.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61/2, நல்லூர் குறுக்கு வீதி,*
*(மாநகரசபை முன் வீதி)*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யோகேஸ்வரி (ராஜி) (மனைவி)
சின்னத்தம்பி (தந்தை).

## கணக்கீடு

☛ அறிவுறுத்தல்

நாளை நடைபெற இருந்த கணக்கீட்டுப் பாடப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் மாற்றப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் நாளை மறுதினம் பரீட்சை இடம்பெறும்.

ஆசிரியர்: S.தவா (C/19024)

தரம் 1 முதல் O/L வரை

**பிரிவு 2 ஆரம்பம்**

05.01.2002 (சனி)

★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (96677)


## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.4

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் மோதும் அணிகள் வருமாறு:-

★ யாழ்.கல்விக்கோட்டம் எதிர் கோப்பாய் கல்விக்கோட்டம்.

★ பளை கல்விக்கோட்டம் எதிர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

★ சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம் எதிர் தெல்லிப்பழை கல்விக்கோட்டம். (ஒ)


பல்கலைக்கழகம் செல்ல இருக்கும் மாணவர்களுக்கு!

# ENGLISH

புதிய வகுப்புகள்

சனி - 1 - 2 (ப.நே.)

ஞாயிறு - 2 - 4 (ப.நே.)

ஆரம்பம் – 05–01–2002

**Mr. R.RAJESVARAN (B.A.)**

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம். (96599)


## கொழும்பில் சுவரொட்டி

"விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாம்" என்று கோரும் வாசகங்களுடன் சுவரொட்டிகள் ஜே.வி.பியினரால் கொழும்பில் ஒட்டப்பட்டிருந்தன.

இத்தகைய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது, சமாதானப் பேச்சுக்களை குழப்பும் முயற்சி என்று தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன. (உ-3-10)


(C/19027)

## IBMS இன் 2002 கலண்டர் உள்ளே......

இணையப் பக்க வடிவமைப்பு, இணைய சேவை வழங்குநர்கள்

**www.sooriyan.com**

(Internet Solution Providers)

இந் நூற்றாண்டின் இணையப் புரட்சியில் உங்களை இணைக்க – தமிழ் இணைய முன்னோடிகளான எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

077 882893, 077 780304

இல.14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு.

(தமிழ்ச் சங்கத்திற்கு முன்பாக) (C/20081)

# IBMS

இன் Module Examination

MsWord, MsExcel, MsAccess,Java ஆகிய கற்கைநெறிகளின் பரீட்சை 5ம்,6ம் திகதிகளில் நடைபெற இருப்பதால் நீங்கள் கல்விகற்ற காரியாலயங்களில் உடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்(மீள்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும் அனுமதி அட்டைகளை உடன் பெற்றுக்கொள்ளவும்)

Director

(Ad)

## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

**A/L 2004**

**கணிதப்பிரிவு**

ஆரம்பம்:– 04.01.2002

வெள்ளி– 3 மணி (96672)

## புலமைப் பரிசில் திட்டம் 2002 போட்டிப் பரீட்சை (06-01-2002)

போட்டிப் பரீட்சைக்கூடாக புலமைப்பரிசில் திட்டம் 2002 விண்ணப்பித்த மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) 06-01-2002 ஞாயிறு அன்று (பகல் 10 மணி முதல் 11 மணி வரை) இடம்பெறும்.

அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கத் தவறிய மாணவர்கள் உங்களுக்காக எமது தலைமை அலுவலகத்தில் அல்லது எமது நெல்லியடிக் கிளை நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட மண்டபத்தில் தோற்றமுடியும்.

இயக்குநர்,

IIS, யாழ்ப்பாணம்.

(C/19023)

**A/L 2004**

அமைதியான சூழலில்!!

யாழ்.முன்னணி ஆசிரியர் குழு!

கலை,வர்த்தக, கணித,விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்

விபரங்களுக்கு உடன்தொடர்பு கொள்க

NALLUR SCIENCE ACADEMY

கணக்கீடு தொடக்க வகுப்பு

இன்று (4.1.2002) 4.00 p.m. (O.T.)

திரு.கலைச்செல்வன் (96676)

# IBMS

## சான்றிதழ்

புலமைப்பரிசில் திட்டம் I,II,III ஆகியவற்றில் பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க இருப்பதனால் இது தொடர்பாக மாணவர்களின் பெயர்களையும், பெறுபேறுகளையும் உறுதிப்படுத்தும் பொருட்டு தங்களுக்குரிய விலாசத்திற்கு எம்மால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இக்கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் 05.01.2002 இற்கு முன்னர் தாம் பயின்ற நிறுவனத்திற்கு நேரிற் சென்று தமது பெயர்கள், பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

நிர்வாகி.

## புத்தாண்டில் புதிய பிரிவுகள் ஆரம்பம்.........

**Certificate Courses** - Java, C++, Corel Draw, Excel, Word Access

**Diploma Courses** -

- Diploma in Business Application,
- Dip.in Information Tecnology,
- Dip.in Advanced Programming Specialist,
- Dip.in Java Programming,
- Dip.in Desktop Publishing,
- Dip.in Internet & E.Mail,
- Higher Dip.in Software Engineering.




**O\L முடிந்து விட்டது !**

கணனிப் பயிற்சி பெற ஆவலாக உள்ளீர்களா? கவலையை விடுங்கள்......

உங்களுக்கான புதிய விசேட சலுகைத்திட்டத்தின் கீழ் பிரிவுகள் ஆரம்பம் :-05/01/2002

தலைமைக்காரியாலயம், கிளை நிறுவனங்களிலும் பயில முடியும்.

தலைமைக்காரியாலயம் : 701,K.K.S Road, Jaffna.

கிளை நிறுவனம் : N.M.M.V. Road, Nelliyady. Near M.P.C.S, Chankanai.

T.P. :021-3165 E.Mail: ibms@sltnet.lk Director (Ad)

# JAFFNA TECHNICAL INSTITUTE
# JAFFNA, SRI LANKA

Regd. No. 15251 T.P. 3335

## தொழிற் பயிற்சிகள்

- **RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING**
  சகல இன ரேடியோ, ரீ.வி., வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 9 மாதங்கள்)
- **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
  சகல இன மோட்டார், (F)பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
- **MOTOR CYCLE MECHANISAM**
  சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)
- **AIR CONDITIONING AND REFRIGERATION**
  சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
- **CITY AND GUILDS OF LONDON EXAM**
  1. POWER 2. ELECTRONICS

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:

07-01-2002 (கிழமை நாள்களில்)

12-01-2002 (சனி, ஞாயிறு நாள்களில்)

(மேலதிக விவரங்களுக்கு நேரில்)

- DIRECTOR.

52/1, Stanley Road, Jaffna. (றெயில்வே கடவை அருகில்) (C/19047)

No. 7, Palaly Road, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

எமது பேரன்புமிகு இரசாயனவியல் பேராசான்

### ஆ.மகாதேவன்

மறைவினால் துயருற்றிருக்கும் இவ்வேளையில் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

98/99 விஞ்ஞானப் பிரிவு

கற்று வெளியேறிய ஆசிரிய மாணவர்கள்

பலாலி ஆசிரிய கலாசாலை.

## இதய அஞ்சலி



### ஆ.மகாதேவன் (B.Sc., Dip. in Ed. S.L.E.A.S.)

(சிரேஷ்ட விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

இதயங்கள் ஒருதரம் இயங்க மறுத்தன!
இமைகள் இரண்டும் துடிக்க மறந்தன...
இமயம் ஒன்று சாய்ந்திட்ட செய்தி
இடியென வந்ததே உயிரை உருக்கி,
மகாதேவா எனும் மனிதம் சாய்ந்ததோ?
மழைதந்த கார்முகில் காற்றில் கலைந்ததோ?
விளைநிலமொன்று வீணே போனதோ?
கலைதரும் மேடையில் திரை வீழ்ந்து போனதோ?
குருத்துறை கண்ட குறுநிலக் கோவே
கருத்துரை வழங்கும் கற்பக தருவே
இரசாயனத்துறையின் இளைய மகனே - அது
இருள்சூழ்ந்து போமோ இனியென்ன செய்வோம்?
நீ தந்த செல்வங்கள் எத்திக்கும் உண்டு
நீங்காது உன்நாமம் எங்கள் இதயத்தில் உண்டு
தேங்காது உதிர்கின்ற கண்ணீர் துளிகொண்டு
காணிக்கை தந்து எங்கள் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், மாணவர் மன்றம்,
விரிவுரையாளர் குழுமம்,
கல்விசாரா ஊழியர்கள்,
பகுதிநேர விரிவுரையாளர்கள்.

பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி. (96657)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.